மன்றம்

வார ஏடு

ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

மலர் 6—இதழ் 6 ★ 9-6-57 சென்னை விலை 16 காசு

ஐந்தாண்டுத் திண்டாட்டம்!

இரண்டு வைத்தியர்களுக்குள் சண்டை வந்தது. பத்து நாட்களுக்கு முன் அவர்கள் பார்த்த ஒரு நோயாளியைப்பற்றி இருவரும் வெவ்வேறு விதமான கருத்துக்கொண்டிருந்தார்கள்.

"அவனுக்குப் பித்தவாதக் காய்ச்சல் தான், சந்தேகமேயில்லை!" என்று பெரிய வைத்தியர் சொன்னார்.

"மற்ற எல்லாவிதத்திலும் நீங்கள் சொல்வதை ஒப்புக்கொள்கிறேன். இதில் மட்டும் நீங்கள் சொல்வது சரியில்லை. அவனுக்குக்கண்டிருப்பது கபவாதக் காய்ச்சல்!" என்று சின்ன வைத்தியர் மறுத்தார்.

"கண்ணை மூடிக்கொண்டு சொல்லலாம் அது பித்தவாதக் காய்ச்சல்தான்!"

"இல்லை, கபவாதக் காய்ச்சல்தான்!"

"அகஸ்தியர் சாஸ்திரத்தைப் படித்தவர்கள், அதைப் பித்தவாதக் காய்ச்சல் என்று தான் சொல்வார்கள்!"

"போகர் சாஸ்திரத்தின்படி, அது கபவாதக் காய்ச்சல்தான்!"

வரிக்கொடுமையால் திட்டம் வளராது, வறுமையும் வாட்டமும் வளரும்!

"நான் சொல்கிறேன், அது பித்தவாதக் காய்ச்சல், மூன்று வாரத்துக்குப்பிறகு சரியாகிவிடும்."

"நான் சொல்கிறேன், அது கபவாதக் காய்ச்சல்தான், நான்கு வாரத்துக்கெல்லாம் அவன் குணமாகிவிடுவான்."

இப்படி பத்து நாட்களுக்குமுன் அவர்கள் பார்த்த ஒரு நோயாளியைப்பற்றி, இரண்டு வைத்தியர்களும் மிகக் கடுமையாக வாக்குவாதம் நடத்தினார்கள். ஒருவர் அகஸ்தியர் சாஸ்திரத்தை ஒப்பித்தார், மற்றவர் போகர் சாஸ்திரத்தைப் புரட்டினார்.

அந்தச் சமயம் அந்த வழியாக வந்த ஒருவர் அவர்களைச் சமாதானப்படுத்த வந்து, இருவருடைய வாதங்களையும் கேட்டார். வைத்தியர்கள் தாங்கள் பார்த்த நோயாளியைப்பற்றிச் சொன்னார்கள்.

"அடுத்தத் தெருவில், கோடி வீட்டில், ஒருவர் காய்ச்சல்கண்டு படுத்திருந்தாரே, அவரைப்பற்றிதானே சண்டை போட்டுக் கொள்கிறீர்கள்!" என்று அடையாளங்களுடன் சமாதானம் செய்ய வந்தவர் கேட்டார்.

"ஆமாம்! அவரேதான்!" என்றார்கள்.

"அப்படியானால் நீங்கள் சண்டை போட்டுக்கொள்ள வேண்டிய தேவையே கிடையாது. அந்த நோயாளி இரண்டு நாட்களுக்குமுன் இறந்துபோய் விட்டான்!"

"இறந்துபோய் விட்டானா?"

"ஆமாம், இறந்துவிட்டான்!"

"எப்படி இறந்தான், பித்தவாதக் காய்ச்சல்காரன் மூன்று வாரத்துக்கெல்லாம் குணமாகியிருக்க வேண்டுமே!"

"எப்படி இறந்தான், கபவாதக் காய்ச்சல்காரன் நான்கு வாரத்துக்கெல்லாம் குணமாகி நடமாட வேண்டுமே!"

மறுபடியும் பெரிய வைத்தியர் ஒரு வைத்தியப் பாட்டைச் சொன்னார். அதற்குப் போட்டியாக மற்றொரு பாட்டைச் சின்ன வைத்தியர் சொன்னார்.

"எப்படி இறந்தான், என் மருந்து பலத்தில் மூன்று வாரம் நிச்சயம் இருந்தாக வேண்டுமே!"

"எப்படி இறந்தான், என் மருந்து பலத்தில் நான்கு வாரம் நிச்சயம் இருந்தாக வேண்டுமே!"

இரண்டு வைத்தியர்களும் பேசிக்கொள்வது சமாதானம் செய்ய வந்தவருக்கு வேடிக்கையாக இருந்தது. "எப்படி இறந்தான், எப்படி இறந்தான் என்று கேட்டால், எப்படியோ இறந்து போனான். அது பித்தவாதக் காய்ச்சலோ, கபவாதக் காய்ச்சலோ, மூன்று வாரமோ, நான்கு வாரமோ, எது எப்படியிருந்தாலும் அவன் காய்ச்சல்கண்ட ஒரு வாரத்துக்குள் இறந்துவிட்டான்!"

* * *

இரா. செழியன்

தாங்களாக ஒரு பாடலைச் சொல்லிக்கொண்டு வைத்தியர்கள் வாதடியதைப் போல, மத்திய மந்திரிகள் நாட்டின் நிலைமைபற்றி தாங்கள் போட்டிருக்கும் கணக்கை வைத்துக்கொண்டு, வாதாடுகிகள். முக்கியமாக நிதி மந்திரி கனம் கிருஷ்ணமாச்சாரியார் ஒருவிதமாகப் பாடுறார், உணவு மந்திரி அஜித்பிரசாத் ஜெயின் மற்றொருவிதமாகச் சொல்கிறார். நிதிஇலாகா தரும்புள்ளிவிவரங்களை அவர் ஒப்பிக்கிறார். உணவு இலாகா தரும் விவரத்தை இவர் சொல்கிறார்.

"ஐந்தாண்டுத் திட்டத்தின் பிறகுநாட்டுநிலைசரியாகிவிடும்" என்று நிதி மந்திரி சொல்கிறார். ஐந்தாண்டுத் திட்டத்தை மேலெழுந்த வாரியாகப் பார்த்தால் அப்படித்தான் தோன்றும். ஆனால், வைத்தியர் குறிப்பிட்ட நான்கு வாரத்துக்குப்பின் நோயாளி குணமடைவானா மாட்டானா என்பது ஒருபுறமிருக்க, ஒரு வாரத்திற்குள் நோயாளி எந்தக் கேள்விக்கும் இடம் வைக்காமல் போய்விட்டதுபோல, நிதி மந்திரியார் குறிப்பிடுகிற ஐந்தாண்டு பத்தாண்டு காலத்துக்குப்பின் நிலைமை முன்னேறுமா முன்னேறாதா என்று யோசிப்பதைவிட, அதுவரை இந்த நாட்டு மக்கள் இவர் போடுகிறவரிக்கொடுமைகளைத் தாங்கிக்கொண்டு இருப்பார்களா மாட்டார்களா என்பதை முடிவு செய்து கொள்ள வேண்டும்!

ஆண்டு ஒன்றுக்கு 95 கோடி ரூபாய்களுக்குப் புதுவரிகளை அவர் போட்டுவிட்டார். 95 கோடி என்றால் வரிகள் அந்த அளவுடன் நிற்காது. எப்பொழுதும் வரி விதிக்கும் பொழுது எதிர்பார்க்கும் வருமானத்தைச் சற்றுக் குறைத்துதான் மதிப்பிட்டு, கணக்குப் போடுவார்கள். அதிகமான அளவு எதிர்பார்த்து அதற்குத்தகுந்த செலவு வகைகளைப் போட்டு விட்டால், செலவு செய்த பிறகு எதிர்பார்த்த வருமானம் குறைந்ததென்றால் ஆபத்து. அதனால், எப்பொழுதும் நிதித்திட்டத்தில் வரக்கூடிய வருமானத்தைச் சற்றுக் குறைவாகவே மதிப்பிடுவார்கள். அப்படிப் பார்த்தால், இவர் 95 கோடி ரூபாய்க்குப் போடுகிற வரிச்சுமை 100 கோடி ரூபாய்க்குக் குறையாமல் வரியை வசூலித்துத் தருவதாக இருக்கும்.

நூறு கோடி ரூபாய்க்கு வரிகளைப் போட்டுவிட்டு, கனம் கிருஷ்ணமாச்சாரியார் பாராளுமன்றத்தில் சொல்கிறார், "இந்த வரி விதிப்புகளினால், நகரத்திலுள்ளவர்களுக்கு $1\frac{1}{2}$ சதவிகிதமும், கிராமத்திலுள்ளவர்களுக்கு $\frac{3}{4}$ சதவிகிதமும் தான் செலவு அதிகமாகும்!" என்று. அதாவது அவர் கணக்குப்படி, நகரத்தில் வாழ்பவர்களுக்கு ரூபாய்க்கு $1\frac{1}{2}$ புதுக்காசு அளவு தான் வாழ்க்கைச் செலவு அதிகமாகும், கிராமத்தில் வாழ்பவர்களுக்கு ரூபாய்க்கு $\frac{3}{4}$ புதுக்காசு அளவு

முதல் திட்டத்தின் முடிவு என்ன?

...ான் வாழ்க்கைச் செலவு கூடுதலாகும்! அவர் ஏதோ கணக்குப் போட்டு, அப்படிச் சொன்னார். ஆனால் நாட்டு நிலைமை அப்படியிருக்கிறதா என்றால் இல்லை!

அதிக வரிகள் போட்டபின், அன்றாட வாழ்க்கை வசதிகள் திடீரென விலையேறிவிட்டன.

முதலாவதாக உணவுப் பொருள்கள் விலைஏறியுள்ளது. மூட்டைக்கு 8 ரூபாய், 10 ரூபாய் என்று விலை கூடுதலாகிறது, கிடைக்கக்கூடிய அளவும் குறைகிறது. உணவுப் பற்றாக்குறை ஏற்பட்டு பஞ்ச நிலை உண்டாகுமோ என்று அஞ்சும் அளவுக்கு மக்கள் மனதில் கலவரம் தோன்றியுள்ளது. அரசாங்கப் புள்ளி விவர இலாகாவே, உணவுப் பொருள்களின்மீது விலை திடீரென உயர்ந்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது.

தாவர எண்ணெய்களுக்கு கிருஷ்ணமாச்சாரியார் டன் ஒன்றுக்கு 42 ரூபாய் கூடுதலாக வரி விதித்தார். அவர் வரி விதித்தபிறகு, தாவர எண்ணெய்கள் டன் ஒன்றுக்கு 42 ரூபாய் அல்ல, 100ரூபாய்க்கு மேல் விலை கூடுதலாக ஆனது.

மூன்று வாரத்துக்கு இருப்பான் என்று சொல்லப்பட்ட நோயாளி ஒரு வாரத்துக்குள் இறந்தான் என்று கேள்விப்பட்டதும், "எப்படி இறந்தான், எப்படி இறக்கலாம்?" என வைத்தியர் கூறியது போல, வாழ்க்கை வசதிகளின் விலைகள் நஞ்சுபோல் ஏறிவிட்டன என்று நிதிமந்திரியாரிடம் சொன்னால், "என் கணக்குப்படி ¾ சதவிகிதம் தானே உயர வேண்டும். அதற்கு மேல் எப்படி உயர்ந்தன, எப்படி உயரலாம்?" என்றுகேட்கிறார். உங்கள் கணக்கில் எப்படி இருந்தால் என்ன, முக்கால் சதவிகிதத்துக்குக் குறைவாக கால் சதவிகிதம், அரைக்கால் சதவிகிதம்கூட இருக்கலாம்! ஆனால் உங்களுடைய கணக்கை ஒட்டி நாட்டு நிலைமை இல்லை! மக்களால் தாங்க முடியாத அளவுக்கு விலைவாசியும், வரிச்சுமையும் இருக்கின்றன!" என்றுதான் அவருக்குப் பிறர் கூறவேண்டியிருக்கிறது.

வரிச்சுமைகளின் உயர்வு, ஏழைகளுக்கு உண்டாகும் துன்பங்கள் எல்லாவற்றையும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டுமென்று சொல்கிறார்கள். எல்லாவற்றுக்கும் பதில் கூறுகையில், "ஐந்தாண்டுத்திட்டம் ஐந்தாண்டுத் திட்டம்!" என அதையே மூலகாரணமாகச் சொல்கிறார்கள். வரி விதிப்புகளால் வாழ்க்கைச் செலவு திடீரென உயர்வதையும், பற்றாக்குறை வரவுசெலவுத் திட்டத்தால் பணவீக்கம் உண்டாவதையும், இவற்றால் பொருளாதாரச் சீர்கேடு அடைவதையும் சுட்டிக் காட்டினால், எல்லாவற்றுக்கும் பதிலாக "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை எப்படியும் நிறைவேற்றியாகவேண்டும்!" என்று சொல்கிறார்கள்.

"திட்டத்தை மட்டும் மனதில் வைத்துக்கொண்டு, வரிகளைப் போடாதீர்கள். சுவரை வைத்துக்கொண்டுச் சித்திரம் எழுதுவதுபோல, மக்களுக்காகத்தான் திட்டங்களைப் போடுகிறோம். எனவே மக்கள் தாங்கக்கூடிய அளவுக்கு வரி போடுங்கள். வரியின் அளவுக்குத் திட்டத்தைச் சற்றுக் குறைத்துக்கொள்ளுங்கள். திட்டங்களில் வீண் விரயமாவதைத் தடுத்தாலே, குறைந்த அளவில் திட்டத்தை முடித்துவிடலாம்?" என்று சிலர் சொன்னார்கள்.

"குறுகிய காலத்துக்குள் திட்டத்தை முடிக்கமுடியவில்லையென்றால், கால அளவை நீட்டுவதால் தவறில்லை. குறிப்பிட்ட காலத்துக்குள் திட்டத்தை முடித்தே யாகவேண்டுமென்று, மக்களை அதற்காகத் துன்புறுத்த வேண்டாம்!" என்று சில காங்கிரசுப் பெரியவர்களே கூறினர்கள்.

காங்கிரசுத் தலைவர்களோ, "புனிதமான ஐந்தாண்டுத் திட்டத்தை" போற்றி வளர்ப்பவர்களோ, கால அளவை நீடிப்பதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. ஐந்தாண்டுத் திட்டக் கால அளவை நீடிப்பது, என்பதைக் கேள்விப்பட்டதுமே சில காங்கிரசுக்காரர்களுக்குக் கோபம் வந்தது. திட்டத்தின் கால அளவை நீடிப்பது என்பது அவர்களால் நினைத்துப் பார்க்கமுடியாத ஒரு "பாபச் செயலாக" இருக்கிறது.

திட்டத்தின் அளவைக் குறைப்பதைப் பற்றித் திட்ட மந்திரி குசாரிலால் நந்தா அவர்கள் கண்டித்துப் பேசும் பொழுது "இரண்டாம் திட்டத்தை நாம் குறைத்தால், ஏழ்மை வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய பிசாசுக்கு வாழ்வு அளித்தவர்களாவோம்" என்று கூறினர். ஆக ஏழ்மையையும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் ஒழிக்க இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் அளவில் குறையக் கூடாது என்றாகிவிட்டது.

திட்டத்தின் கால அளவை நீடிப்பதும் கூடாதென்பதற்கு இன்னும் கோபமான குரலில் பதில் சொல்கிறார்கள். திட்டத்தின் காலத்தை நீடிக்க முடியாதென்பதைப் பற்றி, மத்திய மந்திரிகளைவிட மாநில —நமது புகழ்பெற்ற சென்னை மாநில மந்திரியாக இருக்கும் கனம் சுப்பிரமணியம் அவர்கள் மிகக் கடுமையான முறையில் தெரிவித்துள்ளார். "திட்டத்தை ஏழு ஆண்டுகளுக்கு ஏன் நீடிக்கக் கூடாது என்று கேட்கப்படுகிறது. அப்படிக் கேட்பது, வறுமையில் தத்தளிப்பவர்களைப் பார்த்து இன்னும் ஏழு ஆண்டுகளுக்கு இந்த நிலையிலேயே இருங்கள் என்று சொல்வதாகும்." வறுமையில் தத்தளிப்பவர்களின் பக்கத்தைப் பார்த்துக்கொண்டு, வரி விதிப்பை எதிர்த்தவர்களைக் கண்டித்திருக்கிறார்.

"வரிப்பளு அதிகமாயிருக்கிறதே!" என்றால் "திட்டத்தை நிறைவேற்றியாகவேண்டுமே!" என்கிறார்கள். திட்டத்தின் முறையையோ, அளவையோ, காலத்தையோபற்றி யாரேனும் கேட்டால் "திட்டத்தை நிறைவேற்றினால்தான் ஏழ்மைப் பிசாசு போகும், வேலையில்லாத் திண்டாட்டம் ஒழியும், வறுமையில் தத்தளிப்பவர்களுக்கு வாழ்வு கிடைக்கும்" என்று கூறுகிறார்கள்.

ஏழ்மையால் நலிந்தவர்களைப் பற்றியும், வேலையில்லாத் திண்டாட்டத்தால் வாடுபவர்களைப் பற்றியும், "வறுமையில் தத்தளிப்பவர்களைப் பற்றியும்" நமது கனம் மந்திரிகளுக்கு இப்பொழுதாவது "பச்சாதாபம்" பிறந்திருப்பது குறித்து நாம் அவர்களைப் பாராட்டவேண்டும். ஏழ்மையை விரட்டுவதில் எவ்வளவு முனைப்பாக இருக்கிறார்கள்! திட்டத்தைக் குறைக்கலாமா என்றால், "கூடவே கூடாது", எனக் கோபிக்கிறார்கள் ஆர்வத்துடன்; திட்டத்தின்காலத்தை ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டு கூட்டலாமா என்றால், "ஏழ்மை நிலை இரண்டாண்டு கூட இருப்பதா? முடியவே முடியாது!" என முழங்குகிறார்கள் ஆவேசத்துடன். ஐந்தாண்டுக் காலத்துக்குமேல் அரைக்கணமும், எந்தவித நலிவையும் இந்த நாட்டில் அவர்கள் அனுமதிக்கப் போவதில்லை! ஏழ்மைப் பிசாசை விரட்ட, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, வறுமையை ஒழிக்க, இந்த ஐந்தாண்டுத்திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும் என அவர்கள் கூறுவதைப் பார்த்தால், எப்பாடு பட்டேனும், எவ்வளவு வரிகளைத் தாங்கிக்கொண்டேனும்; வேறு எதைத் தியாகம் செய்ய முடியாவிட்டாலும் மக்கள் தொகையில் ஒருபகுதியையாவது வரிகளுக்குத்தியாகம்செய்து மற்றும் இருப்பவர்களாவது நன்றாக இருக்கட்டும் என்று, ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும் ஒன்ற எண்ணம் தோன்றும். ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றினால் உண்டாகும் பலன்களைப் பற்றி அந்த அளவுக்கு மந்திரிகள் நம்பிக்கை தருகிறார்கள்.

ஆனால் "ஐந்தாண்டுத் திட்டத்தை உள்ளபடியே உள்ளவாறே குறிப்பிட்ட காலத்துக்துக்குள் முடித்தால்தான் ஏழ்மைப் பிசாசு ஒழியும், வறுமையில் தத்தளிப்பவர்கள் உல்லாசமாக எழுந்து உலவுவார்கள்!" என்று குசாரிலால் நந்தா அவர்களும், சி. சுப்பிரமணியம் அவர்களும் கூறும் பொழுது, ஒன்றை மறந்து விடுகிறார்கள், அல்லது மற்றவர்கள் மறந்திருப்பார்கள் என்று நினைக்கிறார்கள்.

அதுதான், ஐந்தாண்டுத் திட்டம் எனப் போடப்படுவது இது முதல் தடவையல்ல, இது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்! முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிவடைந்து, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதன் இரண்டாவது ஆண்டில் அவர்கள் இருக்கிறார்கள். ஐந்தாண்டுக்குமேல் ஒரு ஆண்டுகூட நீடிக்கக்கூடாது, ஐந்தாண்டுக்குள் எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டுமென்று அவசரப் படுத்துகிறார்களே, அவர்கள் நன்றாக உணரவேண்டும் நமது அரசாங்கம் திட்டங்களை ஆரம்பித்து ஆறு ஆண்டுகள் முடிந்து, ஏழாவது ஆண்டில் இருக்கிறது என்பதை!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்ட இதே காங்கிரசு, இதே அரசாங்கம் தான், முதல் ஐந்தாண்டுத் திட்டத்தையும் போட்டது! இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குள்ள குறிக்கோள்களும் அடிப்படை நோக்கங்களும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்துக்கும் இருந்தன! அப்படியிருந்தும், ஒரு திட்டம் ஐந்து ஆண்டுகள் நடத்தப்பட்டு முடிந்தும், "ஏழ்மைப் பிசாசு" நாட்டில் உலவுவானேன்? வேலையில்லாத் திண்டாட்டம் நாட்டில் இருப்பானேன்? கனம் சுப்பிரமணியம் கண்டு பரிதாபப்படுமளவுக்கு "வறுமையில் தத்தளிப்பவர்கள்" காணப்படுவானேன்? இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அருமைபெருமைகளைச் சொல்ல நினைப்பவர்கள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்பகாலத்தில் நாட்டில் எவ்வளவு ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி, ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேறினால் இந்த அவலநிலை போகும் என்று கூறுகிறார்கள். ஆனால் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஆரம்ப நிலை, முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்தபிறகு நாட்டில் உள்ள நிலை என்பதை மறந்துவிடக் கூடாது. இதற்குமுன் ஒரு ஐந்தாண்டுத்திட்டம் நிறைவேறியும் இவ்வளவு "ஏழ்மை வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை" இருக்கின்றன என்பதை உணரவேண்டும்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை ஐந்தாண்டுகளுக்குள் நிறைவேற்றினால்தான், ஏழ்மைப் பிசாசை விரட்டமுடியும் என்று சொல்பவர்கள், முதல் ஐந்தாண்டுத்

(11-ம் பக்கம் பார்க்க)

மன்றம்

நாயிறு 9—6—57 சென்னை

ஏதேச்சாதிகார நிதித்திட்டம்!

கனம் கிருஷ்ணமாச்சாரியாரின் வரவு-செலவுத் திட் ம் சில மாறுதல்களுடன் காங்கிரசின் எதேச்சாதிகார லத்துடன் நிறைவேற்றப்பட்டுவிட்டது.

வரவு செலவுத் திட்டம் எதேச்சாதிகார முறையில் தான் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஏழைமக்களின்மீது தாங்கமுடியாத வரிச்சுமை போடப்படுகிறது என்பதற்கு இந்தியத் துணைக்கண்டத்தில் எல்லாப் பக்கத்திலிருந்தும் திர்ப்பு வந்தது. கடுமையான வரிகள் என கண்டிக்காத ட்சிகள் கிடையாது, முதலில் எதிர்க்காத ஏடுகள் இல்லை. திர்க்கட்சிகளைவிட காங்கிரசுக் கட்சியைச் சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களே மிக வன்மையாக வரிக் கொடுமையை எதிர்த்தார்கள். ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமின்றி, மக்களின் கண்டனம் பல நூற்றுக்கணக் ான பொதுக்கூட்டங்களின்மூலம் மத்திய அரசாங்கத் திற்கும் அதன் மதியூக மந்திரிகளுக்கும் அனுப்பப்பட்டன. திர்ப்பு ஏராளமாக இருந்தும், கண்டனம் பலமாகத் தெரி விக்கப்பட்டபோதிலும் மத்திய அரசாங்கம் தனது வரவு-செலவுத் திட்டத்தை விடாப்பிடியாக எதேச்சாதிகார முறையில் நிறைவேற்றிவிட்டது. கட்சிக் கட்டுப்பாட்டின் ாரணமாக, காங்கிரசு அங்கத்தினர்கள் தெரிவித்த திர்ப்பு பாராளுமன்றத்தில் ஓட்டெடுப்பின்போது வெளிப் டவில்லை. காங்கிரசு மந்திரி சபையினர்மட்டும், கட்சிக் ட்டுப்பாடு என்ற தடையை நீக்கி காங்கிரசு அங்கத்தினர் அனைவரின் மனச்சாட்சிக்கும் இடமளித்திருப்பார்களே ானால், மந்திரி சபையினர் தவிர மற்றெல்லோரும் வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராகவே வாக்களித்திருப்பார் ள். மந்திரி சபையில்கூட நேரு பண்டிதரையும் நிதி ந்திரியாரையும் தவிர எவ்வளவுபேர்கள் இந்த அநியாய ரிகளுக்கு ஆதரவு தருவார்கள் என்பது சந்தேகம். கட்சிக் ட்டுப்பாடு காங்கிரசு அங்கத்தினர்களைப் பிடித்து வைத் து, பண்டித நேரு அடிக்கடி குறுக்கிட்டு வாதாடியது-உத் ரவிட்டது மற்றவர்களுக்கு வாய்ப்பூட்டு போட்டது, அத ல் வரவு-செலவுத் திட்டம் பெருவாரியான ஓட்டுக்களால் றைவேறியது. கட்சிக் கட்டுப்பாடும், பண்டித நேருவின் க்கத்துணையும் இல்லாதிருந்திருக்குமேயானால், நிதித் ிட்டம் நிறைவேறியிருக்குமா என்பது ஐயப்பாட்டிற் ரியதே!

மிகக்கடுமையான வரிகளை வாரி வீசுகின்ற இந்த வரவு செலவுத் திட்டம், பெருவாரியான மக்களின் எதிர்ப்புக்குப் ின்னும் நிறைவேறியுள்ளது. மக்களின் எதிர்ப்பு இருப் தைக் காங்கிரசுக்காரர்களே ஒப்புக்கொண்டுள்ளார்கள். க்களை மதிக்காமல், மக்களுக்குத் துன்பந்தரும் வரிகள் பாடப்பட்டன. இது ஜனநாயக முறைக்கு ஏற்றதல்ல!

ஜனநாயக முறையில் பண்டித நேருவுக்கோ காங்கிர க்கோ நேர்மையான நம்பிக்கை இருந்திருக்குமேயானால், அவர்கள் மக்களின் விருப்பத்தை, மக்களின் அனுமதியை ன்னதாகப் பெற்றிருக்கவேண்டும். கனம் கிருஷ்ணமாச் ாரியாரிடம் ஜனநாயக முறையையோ, அதன் நேர்மை யையோ, நம்பிக்கையை நாம் எதிர்பார்க்கவில்லை. பணமும் தவியும் அவருக்குப் பழக்கப்பட்ட பொருள்களேயன்றி, க்களின் மனப்போக்கை அறியாதவர் அவர். 35 கோடி மக்கள் இருக்கிறார்களென்ற கணக்குத் தரப்பட்டால், ஒவ்வொருவரிடம் பத்துக் காசு பிடுங்கினால் 3½ கோடி ரூபாய் கிடைக்கும் என்று கமிஷன் வியாபாரக் கணக்கு கனம் கிருஷ்ணமாச்சாரியாருக்குத் தெரியுமேயன்றி, இவ்வளவு வரிகளைத் தருகிற மக்களுக்கு நாம் எவ்வளவு மதிப்புத் தர வேண்டும் என்ற ஜனநாயகக் கணக்கு அவருக்குத் தெரி யாது.

"நாட்டுக்குச் சுபீட்சம் உண்டாக, மாட்டுப் பெட்டியில் ஓட்டுப் போடுங்கள்" என்று மக்களிடம் ஓட்டுகளை வாங்கிக் கொண்டாரே, அந்த ஓட்டுகளின் எண்ணிக்கை பதவிக்குச் செல்ல போடப்பட்ட கணக்காயிற்றே அன்றி, ஜனநாய கத்தின் கணக்காக அவருக்குப் படவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கும் மிகப் பெரிய குழப்பத்தை அரசாங்கம் செய்ய முன்வந்துள்ளது. ஆனால் அதை முன்கூட்டி மக்களுக்கு அறிவித்திருக்க வேண்டியது அரசாங்கத்தின் நீங்காக் கடமை. அறிவித் திருப்பதுமட்டுமல்ல, அறிவித்து அனுமதியையும் பெற்றி ருக்கவேண்டும். காங்கிரசு அரசாங்கமும், அதன் கணக் கப்பிள்ளையாக விளங்கும் கிருஷ்ணமாச்சாரியாரும் அவற் றைச் செய்யவில்லை! அதற்குச் சமாதானமாக "அதிக வரிகள் விதிக்கமாட்டோம் என்று நான் யாருக்கும் வாக் குறுதி தரவில்லை, எனவே புது வரிகள் போடும்பொழுது என் மனச்சாட்சி சஞ்சலமடையவில்லை" என்று கிருஷ்ண மாச்சாரியார் கூறியுள்ளார். அதிக வரிகள் விதிக்கமாட் டோம் என்று அவர் வாக்குறுதி அளிக்காமலிருந்திருக்க லாம். ஆனால், "அதிக வரிகள் விதிக்கப்போகிறோம்!" என்று அவரோ காங்கிரசோ, தெரிவிக்கவில்லை. வரிக் கொடுமையைப்பற்றி எதுவும் சொல்லாமல், ஐந்தாண்டுத் திட்டம்பற்றி மட்டும் வானளாவப் புகழ்ந்து, வாக்குச் சீட்டு களை வாங்கிக்கொண்டுபோய் பதவியிலமர்ந்ததும், இப் பொழுது வரிவிதித்துள்ளார்கள்.

மனச்சாட்சி சஞ்சலப்படவில்லையென கிருஷ்ணமாச் சாரியார் கூறுகிறார். அவர் மனச்சாட்சி எப்பொழுது சஞ்சலப்படும், எந்த அளவு சஞ்சலப்படும், இவைகளெல் லாம் நமக்குத் தெரியாது. மக்கள் மிகப் பெரிய சஞ்சலத் துக்கு, வேதனைக்கு, கொடுமைக்கு, சோகமயமான வாழ் வுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்கள் என்பதுமட்டும் நன்றாகத் தெரிகிறது.

அதிக வரிகள் விதிக்கப்படப்போவது காங்கிரசுத் தலைவர்களுக்கும், கனம் கிருஷ்ணமாச்சாரியாருக்கும் முன் கூட்டியே, தேர்தலுக்கு முன்பே நன்றாகத் தெரியும்! இதை யாரும் மறைக்க முடியாது. அகில இந்திய காங்கிரசு கமிட்டிக் கூட்டத்தில் பண்டிதநேரு பேசுகையில், "வரிச் சுமைகளை மக்கள் ஏற்கவேண்டுமென்று போதிய காலத் துக்கு முன்னதாகவே நாம் தெரிவித்திருக்கவேண்டும்." என்று பேசியுள்ளார். நேருவின் பேச்சிலிருந்து, மக்கள் மீது போடப்படும் வரிச் சுமைகள் திடீரென்று கண்டுபிடிக் கப்பட்டவை அல்ல, நீண்டகாலமாக மந்திரி சபையினரால் கவனிக்கப்பட்டு, நிதிமந்திரியால் கணிக்கப்பட்டு, கடைசி யாகப் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. ஆனால் தேர்தல் வருவதற்கு முன் தெரிந்தால் தேர்தல் முடி வுகள் வேறுவிதமாகலாம் என்ற கட்சிப் பற்றினால் அவற் றைப் பாதுகாப்பாக மறைத்து வைத்திருந்து வெற்றி பெற்று மீண்டும் வந்ததும் போடப்படுகின்றன.

ஜனநாயகத்தில் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், காங்கிரசு மந்திரி சபையின் திட்டங்களுக்கு மக்களின் ஆதரவு இருக்கிறது என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருந்தால், வரிச்சுமைகளை நன்றாக விளக்கி, வரித்திட்டத்தை அடிப்படையாக வைத்து கனம் கிருஷ்ணமாச்சாரியார் மீண்டும் தேர்தலுக்கு நின்று பார்க்கட்டும். அப்பொழுது "கனம்" ஆக முடிகிறதா? அல்லது வரிக்கனத்தால் தாக்கப்பட்ட மக்கள் இலேசாக அவரை ஆக்கி வீட்டுக்கு அவரை அனுப்புகிறார்களா என்பது தெரியும். ○

வினா: "வடநாடு அணைக்கட்டுக்களால் வளர்க்கப்படுகிறது. தென்னாடு புறக்கணிக்கப்படுகிறது என்று திராவிடமுன்னேற்றக் கழகத்தார் கூறுகிறார்கள். தென்னாட்டில் அணைக்கட்டு கட்டுவது என்றால், அண்ணாதுரைவீட்டுச் சாக்கடைக்கும், நெடுஞ்செழியன் வீட்டுச் சாக்கடைக்குமா கட்டுவது? இங்கே அணைக்கட்டு கட்ட எங்கே பெரிய ஆறு ஓடுகிறது?" என்று ஆளும் காங்கிரசுத் தலைவர்களிலே ஒருவர் கேட்கிறாரே, அதுபற்றிய கருத்து என்ன?

விளக்கம்: எந்தெந்த ஆற்றுக்களுக்கெல்லாம் அணைக்கட்டுக்கள் கட்டலாம் என்ற தீவிர சிந்தனையில் வடநாட்டுக் காங்கிரசுக்காரர்கள் ஈடுபட்டிருக்கும்போது, தென்னாட்டில் ஆளும் காங்கிரசுத் தலைவர்கள் எந்தெந்த சாக்கடைகளுக்கு அணைக்கட்டுக்கள் கட்டலாம் என்ற ஆழ்ந்த சிந்தையில் அமிழ்ந்திருக்கிறார்கள் என்று வினாவின் மூலம் தெரிய வருகிறது.

தென்னாட்டில் அணைக்கட்டு கட்டுவதற்கு எஞ்சியுள்ள இடங்களாக அந்தக் காங்கிரசுத் தலைவருக்குப் படுபவை, அறிஞர் அண்ணா அவர்கள் வீட்டுச்சாக்கடையும், நெடுஞ்செழியன் வீட்டுச் சாக்கடையும் தான் போலும். சாக்கடைக்கு அணைக்கட்டு கட்டுவதற்கான அறிவும் தெளிவும், ஆற்றலும் துணிவும், தகுதியும் திறமையும் இங்கேயுள்ள ஆளும் காங்கிரசுத் தலைவர்களுக்கு உண்டா என்பதே ஐயப்பாட்டிற்குரியதாகும்.

காந்தியார் காலத்தில் 'சந்தனமாக' இருந்த காங்கிரசு, இப்பொழுது காமராசர் காலத்தில் 'சாக்கடையாக' மாறியிருத்தலாலும், ஆங்காங்கே அந்தச் சாக்கடைக்கு அணைக்கட்டுகள் கட்டும் தீவிர முயற்சிகளில் ஆளும் காங்கிரசுக்காரர்கள் ஈடுபடவேண்டிய நெருக்கடி நிலைமைகள் ஏற்பட்டிருப்பதாலும் போலும், சாக்கடைக்கு அணைக்கட்டு கட்டுவதிலே மிக அக்கறையுடையவர்களாக அவர்கள் இருக்கிறார்கள்!

இப்படியெல்லாம் கூறுவதன்மூலம் ஆளும் காங்கிரசினர் தங்களைத் தாங்களே தாழ்த்திக்கொள்வது மட்டுமல்லாமல், தங்களது நாட்டையும், தங்களது நாட்டு மக்களையும் மிகமிகத் தாழ்த்திக் கொள்பவராகிறார்கள். அதோடு அவர்கள் தங்கள் நாட்டைப்பற்றிய தம் அறியாமையையும் வெளிப்படுத்திக்கொள்கிறார்கள்.

'வடநாடு வளமாக்கப்படுகிறது, தென்னாடு வறுமையாக்கப்படுகிறது' என்று தி. மு. கழகம் கூறுகிறதென்றால், அதற்கான காரணகாரிய விளக்கங்களைத் தெள்ளத் தெளிய நாட்டுமக்கள் முன் எடுத்து வைத்துதான் வருகிறது. தி. மு. கழகம் எடுத்துரைக்கும் விளக்கங்களை மறுத்துரைக்கும் வன்மையோ, வகையோ, வழியோ ஆளும் காங்கிரசாரிடத்தில் உண்டா என்றால் அதுவும் இல்லை. எனவேதான், அவர்கள் சிறுவர் வாயிலும் சிரிப்பை விளைவிக்கத்தக்க வகையில் ஏதேதோ சொல்லிவருகின்றனர்.

முதல்-இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டங்களின் கீழ்ப் பெரும் பெரும் அணைக்கட்டுக்கள் வடநாட்டில் எழும்பியுள்ளன. அவற்றிற்குப் பல நூறு கோடி ரூபாய்கள் செலவழிக்கப்பட்டிருக்கின்றன. தென்னாட்டினர் கொடுக்கும் வரிப்பணங்களில்பெரும்பகுதி அப்படிப்பட்ட அணைக்கட்டுக்களுக்குத்தான் போய்ச் சேருகின்றது. தென்னாட்டிற்குப் பயன்படுத்தப்படவில்லை; அது வடநாட்டை வளப்படுத்தவே பயன் படுத்தப்பட்டு வருகிறது, இந்த உண்மையைக் கீழேகாணும் புள்ளிவிவரங்களிலிருந்து தெளிவாக அறியலாம். வடநாட்டில் மட்டும் சுமார் ஆயிரங்கோடி ரூபாய்க்குமேல் அணைக்கட்டுத் திட்டங்கள் நிறைவேறி வருகின்றன. அவற்றில் முக்கியமான சிலமட்டுமே கீழே குறிக்கப்படுகின்றன.

	கோடி ரூ.
பக்ரா-நங்கல் திட்டம்	176
தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டம்	110
ஹிராகூட் திட்டம்	100
சாம்பல்நதித் திட்டம்	62
கோசிநதித் திட்டம்	46
ரீகண்ட் திட்டம்	45
கொய்னாநதித் திட்டம்	33
கக்ராபூர் திட்டம்	11

இவைபோன்று கோடிக்கணக்கிலும். இலட்சக்கணக்கிலும் மேலும் பல்வேறு திட்டங்கள் அங்கு நிறைவேறிவருகின்றன.

தென்னாட்டைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க திட்டங்கள் மிகச்சிலவே. அவைகளுள் சில வருமாறு.

	கோடி ரூ.
துங்கபத்திரா திட்டம்	49
கீழ்ப்பவானித் திட்டம்	9.61
மாலம்புழாத் திட்டம்	5.28
மணிமுத்தாறு திட்டம்	3.75
வாலயாறு திட்டம்	1.13
ஆரணியாறு திட்டம்	1.04

அணைக்கட்டுத் திட்டங்களைத்தவிர ஒவ்வொன்றும் நூறுகோடி ரூபாய்க்குமேல் செலவழியக்கூடிய நான்கு பெரிய இரும்பு உருக்குத் தொழிற்சாலைகள், இரண்டு எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள், உரத் தொழிற்சாலைகள், வெடிமருந்து தொழிற்சாலை, பென்சிலின் மருந்து தொழிற்சாலை சித்தரஞ்சன் என்ஜின் தொழிற்சாலை போன்ற பல்வேறு தொழிற்சாலைகள் வடக்கே நிறுவப்பட்டுள்ளன. மேலும் பல தொழிற்சாலைகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளன. தென்னாட்டில் எட்டுகோடி ரூபாயில் கோச்சுத் தொழிற்சாலை, இரண்டரைக்கோடி ரூபாயில் டெலிபோன் தொழிற்சாலை, இரும்பு உருக்குத் தொழிற்சாலை ஆறுகோடி ரூபாய் உதவி, ஒன்றே முக்கால்லட்ச ரூபாயில் அப்பளத்தொழிற்சாலை போன்ற இவைகளே நிறுவப்பட்டுள்ளன. இந்தப் புள்ளி விவரங்களையெல்லாம் கூர்ந்து நோக்குபவர்கள் தென்னாடு பெறவேண்டிய வசதியையும், உதவியையும், சலுகையையும் பெறவில்லை என்பதையும், தென்னாட்டு வரிப்பணத்தில் வடநாடு கொழிக்கவைக்கப்படுகிறது என்பதையும் தெளிவாக உணர்ந்துகொள்ளலாம்.

"வடநாட்டில்தானே பெரிய பெரிய ஆறுகள் ஓடுகின்றன; ஆகவேதான் அங்குப் பெரிய பெரிய அணைக்கட்டுக்கள் கட்டப்படுகின்றன" என்று நிதி அமைச்சர் சுப்பிரமணியம் போன்றவர்கள்கூறுகின்றனர். பர்மாவில் ஐராவதி ஆறும், பாக்கித்தானில் சிந்து ஆறும், இரஷ்யாவில் வால்கா ஆறும், எகிப்தில் நைல் ஆறும் ஓடுகின்றன, அவையெல்லாம் பெரிய ஆறுகள் என்பதற்காக நமது தென்னாட்டு வரிப்பணம் அங்கெல்லாம் அனுப்பப்படவில்லையே! வடநாட்டிற்கு அடிமைப்பட்டிருக்கிறோம் என்ற காரணத்திற்குத்தானே நமது வரிப்பணம் இன்று வடநாட்டுக்குச்சென்று வடவர்களுக்குப் பயன்படுகின்றது.

தென்னாட்டில் கங்கை, பிரம்மபுத்திரா போன்ற பெரிய ஆறுகள் இல்லாவிட்டாலும், திட்டங்கள் தீட்ட ஆயிரக்கணக்கான வழிகள் இருக்கின்றனவே! அறிஞர் அண்ணாவீட்டுச்சாக்கடையும், நெடுஞ்செழியன் வீட்டுச் சாக்கடையும் மட்டுந்தான் திட்டம் போடுவதற்கு இருக்கின்றன என்றல்லவா ஆளவந்தார்கள் கருதுகின்றார்கள். என்னே அவர்தம் அறிவு இருந்தவாறு!

தென்னாட்டில் காவிரியாற்றுத் தண்ணீர் மட்டுந்தான் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்து பங்கு பயன்படுவதாக அமைந்திருக்கிறது. கிருட்டிணா கோதாவரி ஆற்று நீரில் 45சதவிகிதந்தான் பயன்படுகிறது, 55சதவிகிதம் வீணே கடலில் போய் விழுகிறது. இப்படி வீணாகும் தண்ணீரைப் பயன்படுத்த பல திட்டங்கள் போடலாம. மேற்குத் தொடர்ச்சி மலையில் பெய்கின்ற நீரில் 8[illegible] சதவிகிதம் வீணே அரபிக்கடலில் போய் விழுகின்றது. மேற்குத் தொடர்ச்சி மலையில் பல குடைவுகள் போட்டால் மேற்கே சென்றுகொண்[illegible]கும் வெள்ளத்தைக் [illegible] திருப்பி, வர[illegible]டுகிடக்கும் மதுரை, இரா[illegible]மநாதபுரம், திரு[illegible]நெல்[illegible]வலி மாவட்டங்களை வளம[illegible]க்கப் பகுதிகளாக மாற்ற[illegible]கும். மத்திய ஆட்சியினர்க்கு மனமிருந்தால் இதற்கான திட்டங்கள் பல தீட்டலாம்.

பம்பாயிலும், கல்கத்தாவிலும் எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலைகள் வைத்திருக்கிறார்கள் என்றால், அங்கெல்லாம் எண்ணெய் ஊறுகின்றது என்றுபொருள்? இல்லையே! அந்த எண்ணெய் சுத்திகரிப்புத் தொழிற்சாலையைச் சென்னையில் நிறுவலாமே! தென்னாட்டைப் புறக்கணிப்பதையே நோக்கமாகக் கொண்ட வடநாட்டு ஆட்சியாளரிடத்தில் அந்த நியாயத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? வடநாட்டிற்கு அடிமைபோன ஆட்சியைச் சார்ந்த நிதியமைச்சர் தோழர் சுப்பிரமணியம் அவர்களிடமே கூட எதிர்பார்க்க முடியவில்லையே!

நெய்வேலி நிலக்கரித் திட்டத்திற்காக இந்தியப் பேரரசு ரூபாய் 69கோடி ஒதுக்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அந்தத் திட்டத்தினால் கிடைக்கும் இலாபத்தில் முக்கால்பங்கை டில்லி அரசு எடுத்துக்கொள்ளுமாம்! அதன் முழுப்பயனும் தென்னாட்டிற்கே பயன்பட வடவர் விடப்போவதில்லை என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

சேலம் மாவட்டத்திலுள்ள மாக்னசைட் சுரங்கத் தொழிற்சாலையை ஒரு கல்கத்தாகம்பெனியிடம்ஒப்படைக்கவேஇந்திய அரசு முயற்சி எடுத்துள்ளது. அதனைச் சென்னை அரசிடமோ அல்லது ஒரு தென்னாட்டுக்கம்பெனியிடமோ ஒப்படைக்க இந்தியப் பேரரசு இணங்கப்போவதில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படியாகப் பலப்பல உண்டு!

ஆளும் காங்கிரசினர் தங்களையும், தங்கள் மக்களையும், தங்கள் தாயகத்தையும் எவ்வளவு மட்டமாகக் கருதிக் கொண்டிருக்கின்றனர் என்பதையும், அவர்களது அறியாமையையும் வினாவின் மூலம் அனைவரும் நன்கு அறிந்துகொள்ளலாம்! O

றுகதை

காதற் பரிட்சை!

வளவன்

சங்கரனும் சந்தானமும் அறையில் அமைதியுடன் ஒருவரையொருவர் பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்கள். என்ன செய்யலாமென்ற யோசனை. அன்று ஞாயிற்றுக்கிழமை. திங்கள், செவ்வாய்கூட கல்லூரிக்கு விடுமுறை. மூன்று நாட்களுக்குத் தொடர்ந்து கல்லூரி இல்லையென்றால், என்ன செய்யலாம்? சோம்பேரித்தனமாக இருந்தது. படிக்கலாம், படிக்க வேண்டிய பகுதிகள் ஏராளமாக இருந்தன. அவர்கள் இரண்டு பேர்களில் சந்தானமாவது அவ்வப்பொழுது கொஞ்சம்படித்துவிடுவான், சங்கரனுக்கு மற்றவர்கள்படித்துக் காதில் விழுவதைத் தவிர வேறு படிப்பு கிடையாது. என்ன செய்யலாமென்று சங்கரன் யோசித்தால், படிப்பைப் பற்றி அல்ல, படிப்பு அல்லாமல் வேறு வேலைகள் என்ன செய்யலாம் என்பதுதான். வேடிக்கை, விளையாட்டு, குறும்புத்தனம், ஏதாவது அந்த நேரத்தில்—காலை பத்து மணிக்கு, அறையிலுட்கார்ந்தபடியே செய்தாகவேண்டும். அந்தப் பொல்லாத வேளையில் சுந்தரம் அந்தப் பக்கமாகப் போனான்.

சங்கரன் ஒருகோடியில் இருந்தால், சுந்தரம் மறுகோடியில் இருப்பவன்; சங்கரன் படிக்காமல் இரண்டு ஆண்டுக்கு ஒரு வகுப்பு என மிகத் தாராள மனப்பான்மையுடன் கல்லூரியின் பொருளாதார நிலையை ஆதரித்து வந்தபோதிலும், சுந்தரம் படிப்பில் மணியாக இருந்தான். அவனைப் பார்த்தால் புத்திசாலியாகக்கூடத் தெரியாது, அளவுக்குமீறி அதிகம் படித்ததால் ஒருவகை அசட்டுத்தனங்கூட அவன் முகத்தில் இருந்தது. புத்தகத்தை உருப்போட்டு போட்டு, புத்திசாலித்தனத்தைவிட ஞாபகத்தில் அதிக நம்பிக்கையை அவன் வைத்தான். சுந்தரத்துக்குப் படிப்பைத் தவிர வேறெதுவும் தெரியாது, சங்கரனுக்கு படிப்பைத் தவிர மற்றெல்லாம் தெரியும். சுந்தரம், சங்கரன் இருவரும் தங்களுக்குத் தெரிந்தவற்றை பங்கு போட்டுக் கொண்டிருந்தால், இருவரும் உண்மையில் நல்ல மாணவர்களாகப் பெயரெடுத்திருக்கக்கூடும். அந்த அப்பாவி சுந்தரம், இந்த பொல்லாத பாவி சங்கரன் கையில் இன்று அகப்பட்டுக்கொண்டான்.

"சுந்தரம்! சுந்தரம்!" சங்கரன் கூப்பிட்டான். மற்ற சமயமாயிருந்தால், காதில் விழாததுபோல சுந்தரம் வேகமாகப் போய் தன் அறையில் புகுந்துவிடுவான். இன்று ஞாயிற்றுக்கிழமை, அதிலும் சாப்பிட்டபின் பத்துநிமிடம் படிக்கக் கூடாதென்ற விரதத்தைச் சுந்தரம் அனுசரிப்பவன். சாப்பாடு ஜீரணம் ஆகும்பொழுது படித்தால், படிப்பு ஜீரணம் ஆகாதென்று யாரோ அவனுக்குச் சொல்லி வைத்தார்கள். அதனால் சாப்பிட்டு வந்ததும் சிறிது நேரம் பேசாமல் உட்கார்ந்து பின் படிக்க ஆரம்பிப்பது அவன் வழக்கம். சாப்பிட்டு வந்துகொண்டிருந்த சுந்தரம், சங்கரன் கூப்பிட்டதும் வந்தான்.

சங்கரனுடைய குறும்பு மூளை மிகத் தீவிரமாக வேலை செய்தது.

"நேற்று எங்கே போயிருந்தாய்?"

"அறையில்தானே இருந்தேன்." சுந்தரம் பதிலளித்தான்.

"நான் மத்தியானம் வந்தேன், நீ அங்கு இல்லை!"

"நான் லைப்ரரிக்குப் போயிருந்தேன்!" மற்றவர்கள் வந்து தொந்தரவு செய்வார்கள்போலிருந்தால், சுந்தரம் நேராக லைப்ரரியில் போய் உட்கார்ந்து விடுவான். அங்கு வந்து யாரும் சத்தம் போட்டுத் தொந்தரவு செய்ய முடியாதல்லவா?

"டேய்! நீ மாத்திரம் படித்தால் போதுமா?"

சங்கரன் வம்புக்கு இழுக்கிறான் என்பது சுந்தரத்துக்குத் தெரியும். "உன்னை யார் படிக்கவேண்டாமென்கிறது?"

"நீ இப்படிபடிக்கிறபொழுது, நாங்கள் படித்து மண்ணாய்ப் போனோம்!" கொஞ்சம் ஏக்கத்துடனேயே சங்கரன் சொன்னான்.

வழக்கமாக அந்த நேரத்துக்கு அங்கு வந்து சேரவேண்டிய கும்பல்—மணி, மாணிக்கம், சத்தி, மூர்த்தி, சண்முகம், சாரங்கன், இந்தப் படை உள்ளே வந்து வரிசையாக அமர்ந்தது. மற்றவர்கள் வந்துவிட்டதால், தான் தப்பித்துப் போகலாமென சுந்தரம் நினைத்தான். ஆனால் சங்கரன் அவனை விடுவதாயில்லை.

"நேற்று மாலை எங்கே போயிருந்தாய்?" சங்கரன் கேள்வி போட்டான்.

"நான் போகிறேன்." சுந்தரம் நழுவப்பார்த்தான்.

"சரி, இரவில் உளறுகிறாயாமே?"

"ஏண்டா, அவனைத் தொந்தரவு செய்துகொண்டு! அவன் போகட்டும், விட்டுவிடு!" மற்றவர்கள் சுந்தரத்துக்குப் பரிந்து பேசினார்கள்.

"இவனைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது. யாருடனும் பேசுவதில்லை, முகத்தில் சோர்வு, கண்களில் ஏக்கம், நடையில் தடுமாற்றம்! பகலில் முணுமுணுக்கிறான், இரவில் உளறுகிறான். இவனுடைய உடம்பில் ஏதோ குறையிருக்கிறது. இங்கே வா! கண்ணைக் காட்டு, நாக்கை நீட்டு!" என்று சங்கரன் சுந்தரத்தை அருகே அழைத்து அவனுக்குத் தொந்தரவு கொடுத்தான்.

அறையில் உட்கார்ந்திருந்த மற்றவர்கள் ஏதோ வேடிக்கை ஆரம்பிக்கிறதென்று கவனமாக உட்கார்ந்தார்கள்.

"நாடி 'படக்' 'படக்' என்று அடிக்கிறது, இருதயம் 'டபக்' 'டபக்' என்று அடிக்கிறது, உடம்பு அப்படியே நெருப்பிடை பட்ட ஈயமென உருகுகிறது. வியாதி மிகக் கடுமையானதுதான்."

"என்ன வியாதி?" வேடிக்கை பார்க்கும் கூட்டத்திலிருந்து கேள்வி வந்தது.

"காதல் வியாதி!" சங்கரன் மிக நிதானமானக்குரலில் அறிவித்தான்.

அறையிலிருந்த நண்பர்களால் சிரிப்புத் தாங்கமுடியவில்லை. சுந்தரத்துக்கும் காதலுக்கும் வெகுதூரம். காதல் தேவதையே நேரில் வந்தால்கூட, தன் கையிலிருக்கிற பொருளாதாரப் புத்தகத்தைக் "கடம்" பண்ணுவதில் சுந்தரம் மும்முரமாயிருப்பானேயன்றி காதலை ஏறெடுத்தும் பார்க்கமாட்டான். அவனுக்குப் போய் காதல்நோய் என்றால்! எல்லோரும் சிரித்தார்கள், சுந்தரமும் சிரித்தான்.

"காதல் வியாதி பொல்லாதது, அது கண்ணுங் காதும் இல்லாதது!" என்று ஒரு பையன் பாடினான்.

"காதல் நோய் என்றால் சாமான்யமானதா? எல்லோருக்கும் வரக்கூடியதா? ஆயிரத்தில் ஒன்று, மிகஅபூர்வம்!" மற்றொருவன் சொன்னான்.

"அதற்குச் செலுத்தவேண்டிய விலை அதிகம்? விலை ஏன் அதிகமாகிறது தெரியுமா..." மணி கேட்டான்.

"தேவைகூட இருந்து சப்ளை குறைவாக இருந்தால், விலை அதிகமாகத்தான் ஆகும்!" என்று பொருளாதாரப் பாணியிலேயே மாணிக்கம் பதில் தந்தான்.

சங்கரன் மீண்டும் ஆரம்பித்தான் "காதல் ஐந்து கட்டங்களில் வளர்கிறது. காட்சிப் படலம்—அதாவது ஒருவரையொருவர் பார்க்கும்படலம் இரண்டாவது கடிதப் படலம் மூன்றாவது சோலைப் படலம்—இருவரும் சந்திக்கும் படலம். காதல் தோல்வியடைந்தால்—உண்மையான காதல் தோல்வியடையத்தான் செய்யும், நான்காவது கட்டம் சோகப்படலம், பின் ஐந்தாவது கட்டம் வெவ்வேறாகத் திருமணப்படலம் வரும். காதல் வெற்றியடைந்தால், திருமணப்படலம் நான்காவது கட்டமாகவும், சோகப் படலம் ஐந்தாவது கட்டமாகவும் வரும். ஆக காட்சிப்படலம், கடிதப்படலம், சோலைப் படலம், சோகப்படலம், திருமணப்படலம் இப்படியாக ஐந்து கண்டங்களையுடையதே காதல் நாடகமென்பது. நாடக இலக்கணத்திற்கு உள்ள ஐந்து இலட்சனங்களும் இதற்கு இருக்கின்றன!" வகுப்பில் படத்தை வைத்து ஆசிரியர் பாடஞ்சொல்லித் தருவதைப் போல, சுந்தரத்தை நிறுத்திக் கொண்டு சங்கரன் கதையளந்தான்.

"எங்கே ஒருதடவை மூச்சுப் பிடித்துவிடு!"

சங்கரன்சொன்னபடி சுந்தரம் மூச்சை இழுத்துவிட்டான்.

"காதல் பெருமூச்சு அப்படியே இருக்கிறது, முதல் கட்டம் இப்பொழுதுதான் தாண்டியிருக்கிறது!"

சுந்தரத்துக்குப் போகவேண்டிய நேரமானது. "யாரை நீ காதலிக்கிறாய், அதை மட்டும் சொல்லிவிடு!" அவன் சட்டையைப் பிடித்துச் சங்கரன் நிறுத்திக்கொண்டான்.

"ஆமாம்! யார் உன்னுடைய காதலி?" நண்பர்கள் சத்தமிட்டார்கள்.

"அவன் சொல்லவேண்டாம். நானே கண்டுபிடித்துவிடுகிறேன்!" என்று சங்கரன் சத்தத்தை அடக்கினான். "நான் ஒவ்வொரு பெண் பெயராகச் சொல்வேன். எந்தப் பெயரின்போது சுந்தரம் முகத்தில் மகிழ்ச்சி உண்டாகிறதோ அந்தப் பெண்ணைத்தான் சுந்தரம் காதலிக்கிறான் என்று அர்த்தம்!"

சங்கரனுடைய முறையை எல்லோரும் ஒப்புக்கொண்டார்கள். எந்தப் பெயருக்கும் சிரிக்காமல் இருந்தால் தப்பித்துக் கொள்ளலாம் என்று சுந்தரம் தீர்மானித்தான்.

சங்கரன் ஒவ்வொரு பெண்ணுடைய பெயராகச் சொல்ல ஆரம்பித்தான். கல்லூரியில் படிக்கிற பெண்களுடைய பெயர்கள் ஒன்று விடாமல் சங்கரனுக்குத் தெரியும்.

"மனோன்மணி!"

சுந்தரம் வகுப்பில் படிக்கிறவள், அழகாகத்தான் இருப்பாள். அவள் பெயர் சொல்லப்பட்டதும், எல்லோரும் சு

(8-ம் பக்கம் பார்க்க)

கண்ணால் கண்டதில்லை! காதால் கேட்டதில்லை!

★ இரா.நெடுஞ்செழியன் எம்.ஏ. ★

தக்க பருவமடைந்துள்ள தன் மகள் பொறுப்புணர்ச்சியுடையவளாகப் பயிற்சி பெற வேண்டும் என்று கருதியும், பலரும் நடமாடும் இடத்தை விட்டகன்று தனியே ஓரிடத்தை அவள் அடையவேண்டும் என்று எண்ணியும் தாய் தன் மகளைத் தினைப்புனங் காக்கும் தொழிலில் ஈடுபடுத்துகிறாள்.

தலைவி மூங்கில் பிளவுகளால் செய்த தட்டை என்னும் கிளி விரட்டும் கருவியை எடுத்துக்கொண்டு, தன் அருமைத் தோழியையும் உடன் அழைத்துக்கொண்டு தினைப்புனம் நோக்கிச் செல்கிறாள்.

தினைப்புனத்தில் பரண் ஒன்று அமைத்துக்கொண்டு, அதன்மீது அமர்ந்து, கிளி, யானை, பன்றி போன்றவைகளால் தினைப்பயிர்க்குக் கேடு ஏற்படாமல் பாதுகாவல் செய்து வருகிறாள்.

பரண்மீது நின்று ஆலோலம் பாடிக் கிளிகளை விரட்டுவதும், தினைப்புனத்தைச் சுற்றிச் சுற்றி வருவதும், அங்குள்ள மரங்களிலுள்ள நல்ல கனிகளைப் பறித்து உண்பதும், நறுமண மலர்களைக் கொய்து மாலை கட்டிச் சூடி மகிழ்வதும், அருகிலுள்ள சுனைக்குச் சென்று நீராடிக் களிப்பதும் ஆன வகைகளில் இருவரும் பொழுது போக்கி வருகின்றனர். வேளாவேளைக்கு அவர்களுக்கு வேண்டிய உணவை நற்றாயோ அல்லது செவிலித்தாயோ கொண்டுவந்து கொடுத்துவிட்டுச் செல்வது வழக்கம்.

அந்தத் தினைப்புனத்தை அடுத்து அருவிகள் பல ஒலிக்கும் வளமிக்க மலை ஒன்று உண்டு. அந்த மலைக்குரிய மலைநாடன் அழகும், ஆற்றலும் ஒருங்கே அமையப்பெற்ற இளமை ததும்பும் ஆணழகன் ஆவான்.

அவன் ஒருநாள் மலைச்சாரலின் பக்கம் உலாவ வருகிறான். தினைப்புனத்தின் பரண் மீது இரண்டு பெண்கள் நிற்பதைத் தொலைவிலிருந்து பார்க்கிறான். அவர்கள் யார் என்பதை அறியவேண்டும் என்ற மனக்கிளர்ச்சி அவனைத் தினைப்புனத்தருகே துரத்துகிறது. அருகே சென்றதும் அழகே உருவெடுத்த கண்ணுக்கினிய நல்லாள் ஒருத்தி, இனியமுறையில் இசைபாடி கிளிகளை ஓட்டிக்கொண்டிருக்கும் காட்சியைக் காணுகிறான். அவள் அருகே நிற்பவள் தோழி என்பதைத் தோற்றப் பொலிவாலும், நடையுடை நடிப்புக்களாலும் அறிந்துகொள்கிறான்.

தலைவியைக் கண்டவுடனேயே அவளது அழகிலே மலைநாடன் மயங்கிப்போய்விடுகிறான். நாள்தோறும் அங்கே வந்து மறைவாக நின்று, அவளது அழகைப் பருகுவதிலே ஆவல் கொள்கிறான். சில நாட்கள் சென்றபிறகு, அவள் கண்ணில்பட்டு அவளது உள்ளத்தைக் கவரவேண்டும் என்றெண்ணி அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறான்.

கண்கவரும் வனப்புள்ள ஆடவனொருவன் நாள்தோறும் வருவதும், தினைக்கொல்லையைச் சுற்றிச்சுற்றிவருவதும், கிளிகளை விரட்டும்போது தானும் ஓடிவந்து விரட்டுவதும், சுனைக்கு நீராடச்சென்றால் தானும் உடன் பாதுகாப்புத் தருபவன்போல் வருவதும் ஆன செயல்களில் ஈடுபட்டிருப்பதைக் காண்கிறாள். அவளையறியாமலேயே அவன் மீது அவளுக்கு ஒரு கவர்ச்சி ஏற்பட்டுவிடுகிறது.

அவள் கையிலேந்தியிருக்கிற தட்டையைக் கைதவறிக் கீழே போட்டுவிட்டால் உடனே ஓடிவந்து எடுத்துக் கொடுப்பது, முட்புதர்களிடையே வளர்ந்திருக்கும் பூக்களைக் கொய்துகொண்டு வந்து தருவது போன்ற பணிகளைத் தானாகவே வலியச் சென்று செய்து, அவளிடம் மெல்ல பேச்சுக் கொடுக்க முயலுகிறான். அவள் முதலில் நாணப்படுகிறாள். தோழியின் உதவிகொண்டு அவனிடம் உரையாடல் நடத்துகிறாள். மெல்ல மெல்ல ஒருவரையொருவர் காதலன்பால் ஈர்த்துக் காதலர்களாக மாறுகிறார்கள்; களவொழுக்கத்தில் இன்பமுற ஈடுபடுகிறார்கள்.

தினைப்புனங்காத்தலிலும், பாடியிருத்தலிலும், ஓடிவிளையாடிக் களித்தலிலும், சுனையாடி மகிழ்தலிலும் தலைவனும் தலைவியும் காலங்கழித்து வருகிறார்கள். தலைவன் தலைவியரது களவொழுக்கத்தை யாரும் கண்டறிந்துகொண்டு விடாதபடி, தோழி அவர்களுக்குப் பாதுகாப்பாக இருந்து வருகிறாள்.

ஒருநாள் சுனையாடச் சென்ற காதலனும் காதலியும் நீண்ட நேரம் சுனையாடி மகிழ்வதிலே காலம் கழிக்கிறார்கள். தோழி சுனைக்கு அருகிலே இருந்து காவல் காக்கிறாள்.

அந்தநேரம் தலைவிக்கும் தோழிக்கும் சோறு எடுத்துக்கொண்டு நற்றாய் தினைப்புனத்திற்கு வருகிறாள். தினைப்புனத்தில் தன் மகளையோ, அவளின் தோழியையோ காணமாட்டாமல் திகைக்கிறாள். சிவந்த வாயையுடைய பச்சைக் கிளிகள், தினைக்கதிர்களையெல்லாம் கொய்துதின்னும் காட்சியைக் கண்டு ஆத்திரங்கொள்கிறாள். தன்மகளை யாரேனும் அழைத்துக்கொண்டு போய்விட்டார்களோ அல்லது கொடிய காட்டு விலங்கு ஏதேனும் ஒன்றால் கேடு ஏற்பட்டதோ, அல்லது விளையாட்டு எண்ணத்துடன் வேறு எங்கேயேனும், யாரோடேனும் விளையாடப் போய் விட்டாளோ என்று பலவாறாக எண்ணி ஒருபோது அச்சமும், ஒருபோதுசினமும் கொள்கிறாள். தோழியைக் கூட அங்குக் காண முடியவில்லையே என்று எண்ணிக் கலங்குகிறாள். வீட்டிற்குச் சென்று செவிலியை அனுப்பித் தேடிப் பார்க்கச் சொல்லலாம் என்று நினைத்து வீடு நோக்கித் திரும்புகிறாள். "மகளையும், தோழியையும் தினைப்புனத்தில் காணமுடியவில்லை. அவர்கள் எங்குச் சென்றனரோ, தெரியவில்லை! எனக்கு ஒரே மனக் கலக்கமாக இருக்கிறது! நீ எப்படியேனும் அவர்களைக் கண்டுபிடித்து அழைத்துக்கொண்டு வா!" என்று தாய் செவிலியிடம் கூறுகிறாள். செவிலியும் தலைவியைத் தேடிக் கண்டுபிடிக்கப் புறப்படுகிறாள்.

செவிலி தினைப்புனத்தருகே செல்கிறாள். அப்பொழுது தலைவியும், தோழியும் பரன்மீது அமர்ந்திருக்கப் பார்த்து வியப்படைகிறாள்.

"சற்று முன் எங்கே போயிருந்தீர்கள்?" என்று செவிலி வினவுகிறாள்.

"இருவரும் சுனையாட போயிருந்தோம்" என் தோழி மறுமொழி பகர்கிறா

"தாய் இங்கே வந்து உ களைக் காணாமல் பதறிப்போய் கலங்கிக் கொண்டிக்கிறாள். உ களை எங்கிருந்தாலும் உட அழைத்துக்கொண்டு வரு படி என்னை ஏவியுள்ளா வாருங்கள் போவோம்! என்று செவிலி அழைக்கிற தாய் என்ன சொல்லப்போ றாளோ, எப்படிக் கடிந்துகொ ளப் போகிறாளோ என்று ப வாறாக எண்ணிக்கொண் சற்று அச்சவுணர்வுடன் இ வரும் செவிலியுடன் இல்ல நோக்கிச் செல்லுகிறார்கள்.

தாய் மகளைக் கண்டது அவளைக் கட்டி அணைத்து கொண்டும், முத்தமிட்டு அவளது அகன்ற நெற்றியை தடவிக் கொடுத்தும் த அன்பின் பெருக்கைக் காட்டி கொள்கிறாள்.

பின்னர் தினைக்கதிர்களை கிளிகள் பெருவாரியா இருந்து கொத்தித் தின்னது அவளது நினைவுக்கு வரவே "பெரிதாக வளர்த்திருக்கு தினைக்கதிர்களையெல்லாம் ப சைக்கிளிகள் கொத்தித்தின்ன நீ அங்கிருந்து காவல் காக்க மல், எங்கே போயிருந்தாய்?" என்று தாய் சற்று கடிந்த கேட்கிறாள்.

தலைவி தாயின் கடிய உ யைக் கேட்டு நடுநடுங்கிப்போ என்ன சொல்வது என் தெரியாமல் திகைத்து அ படியே தலைகுனிந்து நின் கொண்டிருக்கிறாள்.

"என்னடி! நான் கே கிறேன் நீ வாயை மூடி கொண்டு நிற்கிறாய்? எங்க போயிருந்தாய்?" என் வினவுகிறாள்.

தலைவி ஏதோ சொல் வாயெடுத்து மீண்டும் வாயை மூடிக்கொள்கிறாள்.

"என்னடி மென்று விழுங் கிறாய்? உள்ளதைச் சொல்லடி எங்கேசென்றாய்?" என்று கே கிறாள்.

தலைவி அச்சத்தால் நடுநடு கிப்போய் "நான் மலைநாடனை காதால் கேட்டதுமில்லை; அ னைக் கண்ணால் கண்டது மில்லை; மலர்ந்த பூக்களை அ னோடு சேர்ந்து பறித்தது மில்லை; அவனோடு சேர்ந் சுனையிலே பாய்ந்து ஆடியது மில்லை!" என்று உளறி கொட்டிவிடுகிறாள்.

தாய் மகளின் உளறல் பே சிலிருந்து மலைநாடனே அவள் கொண்டிருக்கும் தொடர்பை அறிந்துகொண்டு வெட்கித் தலைகுனிந்து, மூலையிலே போய் உட்கார்ந்து மு காடிட்டு அழத் தொடங் கிறாள். தனக்கும், தன் குடும் பத்திற்கும் அவமானம் வந்து விட்டதே என்று எண்ணி வருந்துகிறாள்.

தலைவி உளறிக்கொட்டும் போதெல்லாம் கையைப் பிசைந்துகொண்டு, நடுங்கிக்

கொண்டிருந்த தோழி, தலைவியை பரபரவென்று இழுத்துக்கொண்டு புழக்கடைப் பக்கம் செல்கிறாள். தினைப்புனத்திடத்தே வந்து தலைவியைக் காணப்பெறாத தலைவன், அவளை வீட்டிலே மறைமுகமாகவாவது பார்க்கலாம் என்ற எண்ணத்துடன் புழக்கடைப் பக்கம்வந்துவேலியின் ஓரத்தில் மறைந்துநிற்கிறாள். அதை எப்படியோ கண்டுகொண்டுவிட்ட தோழி, அவனும் உணரவேண்டும் என்பதற்காகவும், தலைவன் தலைவியை விரைவில் மணமுடிக்காமல் இருப்பானேயானால், அதனால் அவளுக்குத் தொல்லைகள்பல ஏற்படும் என்பதை அவனுக்கு அறிவுறுத்த வேண்டும் என்பதற்காகவும் அவன் காதில் விழும்படி தலைவியோடு உரையாடத் தொடங்குகிறாள்.

"உனக்கு என்ன பித்து பிடித்துவிட்டதா?" என்று தோழி தலைவியைச் சினத்துடன் வினவுகிறாள்.

"என்னடீ சொல்கிறாய்?" என்று கேட்கிறாள் தலைவி.

"என்னடியா! ஏன் இப்படி உளறிக் கொட்டினாய்?"

"என்ன உளறினேன்? ஒன்றுமே நடக்கவில்லை என்று தானே சொன்னேன்!"

"நீதான் நடந்தவற்றையெல்லாம் ஒன்றுவிடாமல், அப்படியே புட்டுபுட்டுச் சொல்லிவிட்டாயே! இனி என்ன சொல்ல இருக்கிறது?"

"நான் சொல்லியது, என்ன தப்பா? பொய்சொல்லக் கூடாதா?".

"தப்பா? என்று வேறு கேட்கிறாயா? நீ பொய் சொல்லுவதாக நினைத்துக்கொண்டு உண்மையை அப்படியே தெரியும்படி கூறிவிட்டாயே!'

"இனி என்னடீ செய்வது?"

"உனக்குத்தான் பொய்யைக்கூட சரியாகச் சொல்லத் தெரியவில்லையே! நீ எப்படித் தான் குடும்பம் வைத்து நடத்தப் போகிறாயோ?"

"இனி அன்னை என்ன செய்வாள்?"

"உன்னை இனி வெளியே அனுப்பமாட்டாள். வீட்டிலேயே சிறைப்படுத்தி வைத்து விடுவாள். உன் காதலனை நீ இனிக்காண முடியாமற் போகும்."

"அப்படியா?" என்று கேட்டுக் கண்களிலே நீர்ததும்ப "இந்தக்கொடுமை நீங்க வேறு வழியே இல்லையா?" என்று ஏக்கத்தோடு வினவுகிறாள் தலைவி.

"உன் காதலன் உற்றார் உறவினரிடத்தில் அறிவிக்கவேண்டிய முறைப்படி அறிவித்து உன்னை விரைவில் திருமணம் செய்துகொள்ள முன் வருவாரேயானால், இந்தக் கொடுமைகளெல்லாம் நீங்கிவிடும்"

"என் காதலருக்கு இச்செய்தி எட்டினால் விரைவில் மணம்புரிய வருவார் என்பது உறுதி!"

"செய்தி அவருக்கு எட்டாமலா போய்விடும்? அவருக்கு மணம் செய்துகொள்ள மனம் வேண்டுமே!"

அதுபோது தாய் புழக்கடை பக்கம் வருகிறாள், இருவரும் வீட்டிற்குள்ளேயே போய் ஓரிடத்தில் அடக்கவொடுக்கமான பெண்கள்போல் உட்கார்ந்து கொள்கிறார்கள்.

வேலியின் மறைவிலே அதுகாறும் நின்று, தலைவி-தோழியின் உரையாடலைச் செவிமடுத்துக்கொண்டிருந்த தலைவன், "நேராக மலைநாடு செல்வேன். திருமணத்திற்கான எல்லா ஏற்பாடுகளுடன் விரைவில் வருவேன்!" என்று தனக்குத் தானே மனதிற்குள் சொல்லிக் கொண்டு அவ்விடம் விட்டு அகல்கிறான்!

* * *

இது நற்றிணை 147 ஆம் செய்யுளை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட காதற் காட்சியாகும். இது தலைவன் சிறைப்புறமாக இருக்கத் தோழி சொல்லியது, என்னும் துறையின் பாற்பட்ட குறிஞ்சித் திணையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் கொள்ளம்பக்கனார் என்ற புலவராவார். இவரது இயற்பெயர் பக்கன் என்பது. கொள்ளம் என்பது இவரது ஊர். இவர் பாடியதாக இந்த ஒரு பாடல் தான் கிடைக்கப் பெற்றிருக்கிறது.

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

இரண்டாண்டு	...	ரூ.	15·00
ஓராண்டு	...	ரூ.	8·00
ஆறுமாதம்	...	ரூ.	4·00
தனி இதழ்	...		16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

இரண்டாண்டு	...	ரூ.	18·75
ஓராண்டு	...	ரூ.	10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

தனி இதழ்	...	20 காசு

ஆந்திரரும், கேரளரும், கன்னடரும் திராவிடக் கூட்டாட்சியின்
காரணத்தை அறிய — திராவிட முன்னேற்றக் கழகத்தின்
உயிரூட்டம் உலகு அறிய [illegible]

'HOMELAND'

'ஆங்கில வார இதழ்'

ஆசிரியர்: அண்ணா

★

9–6–57 முதல் ஞாயிறுதோறும்
வார ஏடாக வெளிவருகிறது.

★

டபுள் கிரவுன் 1×4 அளவில்
8 பக்கங்கள் கிளேஸ் காகிதம்

தனி இதழ் 2 அணா — ஆண்டு சந்தா ரூ 7

விவரங்கட்கு: நிர்வாகி, 'ஹோம்லண்ட்'
95, திருக்கச்சிநம்பித் தெரு : காஞ்சீபுரம்

யாங்கா குவமோ
அணிநுதற் குறுமகள்
தேம்படு சாரல்
சிறுதினைப் பெருங்குரல்
செவ்வாய்ப் பைங்கிளி
கவர நீமற்று
எவ்வாய்ச் சென்றனை
அவணெனக் கூறி
அன்னை ஆனாள்
கழற முன்நின்று
அருவி ஆர்க்கும்
பெருவரை நாடனை
அறியலும் அறியேன்
காண்டலும் இலனே
வெதிர்புனை தட்டையேன்
மலர்பூக் கொய்து
சுனைபாய்ந் தாடிற்றும்
இலனென நினைவிலை
பொய்யல் அந்தோ
வாய்த்தனை அதுகேட்டுத்
தலையிறைஞ் சினளே
அன்னை
செலவொழிந் தனையால்
அளியைநீ புனத்தே.

(நற்றிணை-147)

[பொழிப்புரை: தோழீ! அன்னையானவள் உன்னை நோக்கி, "அழகிய நெற்றியையுடைய இளமகளே! இடமகன்ற மலைச்சாரலின்கண் உள்ள சிறிய தினையின் பெரிய கதிரைச் சிவந்த வாயையுடைய பசிய கிளி கொய்துகொண்டு போகின்ற அளவும் நீ அதனைக் காவாது அங்கு நின்று எவ்விடத்திற்குச் சென்றனை" என்று கூறி அமையாளாகிப் பல படியாக வினவுதலும், நீ அச்சமுற்று அவள் முன்நின்று மூங்கிற் பிளவாற்செய்த கிளிகடி கருவியாகிய தட்டையையுடைய யான் அருவி ஒலிக்கும் பெரிய மலைநாடனைக் காதாலே கேட்டறிதலுஞ் செய்திலேன், கண்ணாலே காண்டலும் செய்திலேன், மலர்ந்த பூக்களைப்
பறித்து அவனோடு சுனையிலே பாய்
தாடியதும் செய்திலேன் என்று நி
வில்லாது பொய்யும் சொல்லா
ளாய், ஐயோ! உண்மையை உரை
துவிட்டாயே? அதனைக் கேட்
அன்னை சினத்தோடு வெள்கித் த
யிறைஞ்சி நின்றனள் கண்டா
ஆதலின் நீ தினைப்புனத்தி
கண்ணே செல்லுதலைப் போக்கி
கொண்டனை; இவ்வளவு அறி
மையையுடைய நீ இனி எங்ங
குடிமை பூண்டொழுகவல்லாய் எ
றெவரும் இரங்கத்தக்கனையாயினை
அவளது சினத்தின்கண்ணே பட
லால் இனி நாம் எப்படிப் பிழைக்க
போகிறோமோ?

தேம் - [illegible]ம், வெதிர் - மூங்கில்
தட்டை - கிளியோட்டும் கருவி.]

* * *

பொய்சொல்ல வந்த தலைவி
பொய் சொல்வது போல
நினைத்துக்கொண்டு, அச்ச
தால் உண்மையை அப்படியே
சொல்லிவிடுவதாகப் புலவ
அமைத்திருக்கும் திற
போற்றி மகிழ்வதற்குரிய
கும்.

காதலன் காதலியர் க
வொழுக்கம் நடத்துதலு
அதனை அறிந்த கற்றாய் கல
குதலும், காதலி வீட்டி
தனியே காவலில் வைக்கப்ப
தலும், காதலன் விரைவி
மணமுடிக்க ஏற்பாடுசெய்
லும் ஆன நிகழ்ச்சிகள் பண்
டைக்காலத் தமிழகத்தில் ஏ
றுக்கொள்ளப்பட்ட சமு
நிகழ்ச்சிகளாகும்.

பருவமங்கைத் தினைப்புன
காத்தல், தட்டை என்னு
மூங்கிற்பிளவாற் செய்யப்பட்
கருவியால் கிளியையோட்
தல், காதலன் காதலியர் சுனை
யாடுதல், மகளின் களவொழு
கத்தை அறிந்த அன்னை
அவளை வீட்டிலேயே காவலி
வைத்தல் என்பன போன்
வழக்கங்கள் இதன்கண் கூற
படுகின்றன.

காதற் பரிட்சை!

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தரத்தின் முகத்தைப் பார்த்தார்கள்; சுந்தரத்தின் முகம் ஆடாமல் அசையாமல் இருந்தது.

"மாலதி!"

மாலதி நன்றாக நடனமாடுவாள். நான்காம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தாள். சுந்தரம் பேசாமலிருந்தான்.

"மைதிலி!"

கல்லூரிப் பாட்டுப் போட்டியில் முதற்பரிசு வாங்கியவள்.

"சரசா!"

சளசளவென்று வகுப்பில் பேசிக்கொண்டிருப்பவள். சரசா என்பதைவிடச் சளசளசா என்றிருந்தால் சரியாயிருந்திருக்கும்.

சுந்தரம் எதிர்ச்சுவற்றில் இருந்த காலண்டரைப் பார்த்தபடி இருந்தான். பெயர்கள் சொல்லப்படும்பொழுது, மிகக் கவனத்துடன் முகத்தை அவன்வைத்துக்கொண்டான். வேடிக்கைபார்க்கும் நண்பர்கள் ஏமாற்றமடைந்தார்கள். சுந்தரத்தைச் சிரிக்கவைக்க மூர்த்தி கோணங்கி வேடிக்கைகள் காட்டினான். சத்தி தலைகீழாக நிற்க முயன்று, திடீரென்று விழுந்தான். சண்முகம் ஒன்னரைக்கண் காட்டி, வாயை அசைத்தான். சுந்தரம் எதற்கும் மசியவில்லை.

அடுத்த பெயர் "மைதிலி!" சொல்லப்பட்டபொழுது எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். சுந்தரம் அப்பொழுதும் பேசாமலிருந்தான.

"சுந்தரி!" கல்லூரியிலேயே சிறந்த அழகியெனப் பெயர் பெற்றவள். அந்தப் பெயரும் வீணாகப் போனது.

"சுகுணா!" இரட்டைச் சடைக்காரி, ஐம்பது கெஜத்துக்கு அப்பால் நிறுத்தப்பட்டால், அழகிப் பட்டியலில் இடம்பெற முடியும்!

"சாரளா!" கேரளச் சீமையிலிருந்து வந்திருந்த ஆரணங்கு.

"கனகம்மா!" தெலுங்கு நாட்டுத் தேன் சிட்டு.

"காஞ்சனா!" அந்தப் பெண்ணைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது. உயர்ந்த பெண்—உயரத்தில். பத்துப் பெண்கள் கூட்டமாக நின்றால்கூட ஒடிந்துவிழுபவள்போல உயரமாக நிற்கும் அவளையும், அவளுடைய கீச்சுக்குரலையும் யாரும் கவனிக்காமல் இருக்க முடியாது. சென்ற ஆண்டு கல்லூரி விழாவில் அவள் பாட்டுப்பாட ஆரம்பித்ததும் கூட்டத்தினர் சிரித்து, கை தட்டிக் கேலி செய்தார்கள். அப்பொழுது காஞ்சனா ஒரே கோபத்துடன் எழுந்து, பாய்ந்து சென்ற காட்சி!

"கோகிலா!" சங்கரன் அடுத்தபெயரைச் சொன்னான்.

சுந்தரம் காஞ்சனா பெயரை நினைத்தபடி இருந்தான். அந்த விழாவில் காஞ்சனா கோபத்துடன் சென்றதும், கூடியிருந்த மாணவர்கள் இன்னும் அதிகமாகச் சிரித்தார்கள். ஒரு மாணவன் எழுந்து போய், "சத்தம் போடாதீர்கள்!" என்றுவேண்டுமென்றே கீச்சுக் குரலில் சொன்னான். அது இன்னும் அதிகச் சத்தத்தை உண்டாக்கியது. அதை நினைத்தபொழுது சுந்தரத்துக்குச் சிரிப்பு வந்தது.

"குமுதா!"

சுந்தரம் சிரித்துவிட்டான்.

அறையிலிருந்த நண்பர்கள் கைதட்டினார்கள். அப்பொழுது தான் சுந்தரம் விழித்துக் கொண்டான்.

"காதற் பரிட்சை இத்துடன் முடிந்தது. சுந்தரம் யாரைக் காதலிக்கிறானென்றால் குமுதாவை!" சங்கரன் அறிவித்தான், ஒலிபரப்பு நிலையத்தில் தேர்தல் முடிவை அறிவிப்பவன்போல.

"யார் அந்தக் குமுதா?"

"அவள்தான் நாலாவது பி. ஏ. லிட்ரேச்சர்!"

"பொருளாதார நிபுணன் சுந்தரத்துக்கும் இலக்கியக்குயில் குமுதாவுக்கும்..." என்று ஒருவன் ஆரம்பித்தான். "காதல் வரக்கூடாது என்று சட்டதிட்டம் ஏதாவது இருக்கிறதா?" என்று மற்றொருவன் கேட்டான்.

"இவன் வகுப்புக்குப் போகும்பொழுதெல்லாம் தனியாகத்தான் போவான். அதுதான் காரணம்! போகிறவழியில் அவள் வகுப்பும் இருக்கிறது."

"அவள்கூடத் தனியாக வருகிறாள், போகிறாள், யாருக்காகவோ காத்திருப்பாள். இப்பொழுதுதான் புரிகிறது!"

சுந்தரம்— குமுதா காதல் பற்றிய முடிவு அறிவிக்கப்பட்டதுதான் தாமதம், அன்று மாலைக்குள் மாணவர் விடுதி பூராவும் பரவிவிட்டது. சாப்பிடும் இடம், சிகரெட்கடை, டென்னிஸ் கோர்ட், எல்லா இடங்களிலும் "கடைசியாகக் கிடைத்த செய்தியாக" சுந்தரம் பெயர் அடிப்பட்டது. வதந்திகள் பரவுவதைப்போல, ஒன்று பத்தாக நூறாக வளர்ந்து சென்றது.

"சுந்தரமா? சுத்த அப்பாவியாயிற்றே!"

"அப்படித்தான் இருந்தான் அத்தனையும் ஊமைக்குறும்பு! அவர்களுடைய காதலை நமது சங்கரன் எப்படியோ கண்டு பிடித்துவிட்டான்!"

"இல்லை, சுந்தரமே போய் சங்கரனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டானாம்."

"குமுதாவுக்குக்கூட அவன் மேல் உயிராம். ஆனால் அவள் அப்பா ஒத்துக்கொள்ளமாட்டார், பெரிய பணக்காரர்."

"இவன் அப்பாமட்டும்! பணமில்லாவிட்டாலும், வைதீகம் நிறைய இருக்கிறது. சாதி வித்தியாசத்தைப் பார்ப்பார்!"

"இரண்டுபேரும், சுந்தரமும் குமுதாவும் எங்கேயாவது ஓடிப்போவதென்று முடிவு செய்து விட்டார்களாம், பரிட்சை முடிந்ததும் ஓடிவிடுவார்களாம்!"

இப்படி சங்கரன் ஆரம்பித்த அடிப்படைமீது, பிரமாண்டமான மாளிகையே எழும்ப ஆரம்பித்துவிட்டது.

இவ்வளவுக்கும் சங்கரனின் குறும்பினால் எல்லோராலும் பேசப்பட்ட பெண் குமுதா ஏதுமறியாமல் தன் அறையில் உட்கார்ந்து, "ஒதெல்லோ" "மாக்பெத்" ஆகிய சோக நாடகங்களை இன்னும் சோகமயமாக்கிக் கொண்டிருந்தாள். முதல்நாள் மாணவர்கள் விடுதியில் எழும்பிய வதந்தி மறுநாள் மாணவிகள் விடுதிக்கு வந்துவிட்டது. சில பெண்கள் மிக ஆவலுடன் அதை வரவேற்றார்கள், மிக உற்சாகத்துடன் மற்றவர்களிடம் சொன்னார்கள், ஆனால் சிலர் "இவளைவிட அழகிகள் இருக்கும் பொழுது இவள் பெயர் எப்படி அடிபடலாம்" எனப் பொருமைப்பட்டார்கள். இவர்கள் ஒன்றுகூடி வம்பு பேசிக்கொண்டிருக்கும்பொழுது "போன் வந்திருக்கிறது, குமுதா அம்மாவுக்கு!" என்று 'ஆயா' வந்தாள். கூட்டம் அப்படியே அயர்ந்து உட்கார்ந்தது.

குமுதா அறையிலிருந்து வெளிவந்து, போன் பேசப் போனாள். எல்லாப் பெண்களும் உற்றுப்பார்த்தார்கள்.

குமுதா-காதல்-போன்-அவனுடன்தானிருக்கும். இப்படி அவர்களுடைய யூகம் சென்றது. மெதுவாக எழுந்து போய் எட்டி நின்று, உற்றுக் கேட்டார்கள். "ஏன் வரவில்லை?" "இல்லை, இல்லை..." "மறுபடியும் எப்பொழுது..." "எனக்குக் கடிதம் எழுதவே நேரமில்லை" "சாயங்காலம் பார்க்கலாம்." என்று இங்கொன்றும் அங்கொன்றுமாக அவர்கள் காதில் விழுந்தது. காதல் சூழ்நிலையில், சுந்தரத்துடன் அவள் என்ன பேசுகிறாள் என்பதை பெண்கள் தங்களுடைய யூகத்தால் பூர்த்தி செய்துகொண்டார்கள். போனை கீழே வைத்துக் குமுதா திரும்பியதும், அவர்களெல்லாம் வேறுபக்கம் பார்த்தார்கள். அவர்கள் போக்கு வேடிக்கையாக இருந்தது, குமுதா தன் அறைக்குத் திரும்பிச் சென்றாள்.

கதவு சாத்தப்பட்டதுதான் தாமதம், பேச்சுக் கிளம்பியது. "எவ்வளவு சிரிப்பு, எவ்வளவு கேலி!" "இவ்வளவு நாளும் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு..." "அவளைப்பற்றி நான் அப்பவே சொல்லவில்லையா, பார்த்தால் பசுமாதிரி இருக்கிறாள், நம்பக்கூடாது."

"அந்த சுந்தரம் யார்? எப்படியிருப்பான்," நான் கூடப் பார்த்ததில்லை..."

"சும்மா படித்துக்கொண்டே இருப்பானாம்," கோபி சொன்னான்."

"அதுசரி, அந்தக் கோபி யார்? அவனோடே நீ ஏன் பேசினாய்? அதைச் சொல்!" என்று மற்றப் பெண்கள் கேட்க ஆரம்பித்தார்கள்.

"சும்மா சத்தம் போடாதீர்கள், கோபி என் சித்தப்பா பையன்!"

குமுதா மீண்டும் வெளிவந்து போனை எடுத்து இரண்டணாவைப் போட்டு, சுற்றிலும் பார்த்து, கதவைச் சாத்திக் கொண்டு பேசினாள். அவள் பேசியது யார் காதிலும் விழவில்லை.

அவள் என்ன பேசியிருப்பாள் என்பதை ஒவ்வொரு பெண்ணும் அவளுடைய கற்பனைத் திறனைப் பொறுத்து எண்ணிப் பார்த்துக்கொண்டாள். பேசும்பொழுது குமுதாவின் முகத்திலிருந்த உற்சாகம், சிரிப்பு, அலட்சியம், இவைகள் வெளியிலிருந்து பார்த்தவர்களுக்கு மலைப்பைத் தந்தது.

இரண்டு தடவையும் தன்னுடன் படிக்கும் சுசிலாவுடன் குமுதா பேசிக்கொண்டிருந்தாள் என்பது வெளியில் காத்திருந்த மாணவிகளுக்குத் தெரியாது.

வதந்திகள், வேடிக்கைகள், ஆரம்பித்தால், ஓரிரண்டுநாட்களில் அடங்கிவிடும். ஆனால் இந்தத்தடவை சுந்தரத்தைப் பற்றி துவங்கிய காதல் கதை உடனே முடியவில்லை. தொடர்கதையாக வளர்ந்துகொண்டே போனது. நாளுக்குநாள் புது மெருகுடன் அது விளங்கியது.

"ஓ! ரோமியோ! எங்கிருக்கிறாய்?",

"வளர்ந்துதேயும் வான்மதிமீது
ஆணையிட வேண்டாம் அன்பே!"

"காதல் காதல் காதல்,
காதல் போயின், காதல்
போயின்..."

சுந்தரம் நடமாடுமிடங்களிலெல்லாம் காதற் பாட்டுகள் காதுபுளித்துப் போகும்வரையில் ஒலித்தன. முன்னைவிட விரைவாகச் சுந்தரம் நடந்தான், யாராவது கூப்பிட்டால் ஓடிப்போய் தன்னறைக்குள் ஒளிந்துகொள்வான். எல்லோரும் சாப்பிட்டுவந்ததும், சந்தடியில்லாமல் தனியாகப் போய் சாப்பிட்டு வருவான். அந்த சமயத்தில் யாராவது கண்டுபிடித்து, "அதோ! போகிறான் ரோமியோ சுந்தரம்!" என்று சத்தமிடுவான். வேட்டை நாய்களிடமிருந்து தப்பி ஓடுகிற முயல்போல, சுந்தரம் அவர்களிடமிருந்து தப்பி ஓடுவான். மிரண்டால், மிரட்டுதல் அதிகமாவதுபோல, சுந்தரத்தை முன்பின் தெரியாதவர்

போல அவனைக் கேலி செய்ய ஆரம்பித்தார்கள்.

குமுதா வெளிப்படையாகக் கேலிக்கு இலக்காகவில்லையென்றாலும், உள்ளூர மற்ற...ர்கள் கண்காணிப்பை...தையும், தன்னைச் சுட்டி...கைச்சாடை செய்வ...தையும் அவள் உணர்ந்தாள். ...ன் அவர்கள் தன்னை அப்படி நடத்துகிறார்கள் என்று அவளுக்குப் புரியவில்லை. அவர்கள் போக்குச் சிலசமயங்களில் புதிராக இருந்தது. உதாரணமாக ஒருநாள் மாலை குமுதா திரும்பி வந்தபொழுது "எங்கு போயிருந்தாய்?" என்று கீச்சென்ற குரலில் காஞ்சனா கேட்டாள்.

"சுந்தரத்தைப் பார்க்க!" அந்தப் பதிலைக் கேட்டதும் காஞ்சனாவும் மற்றவர்களும் மலைத்துப்போய் நின்றார்கள்.

"உண்மையாகவா?"

"உண்மையாகத்தான், இதில் ஏன் பொய் சொல்லவேண்டும்!"

குமுதா பார்க்கப்போயிருந்தது பேராசிரியர் சுந்தரத்தை! அதற்கு ஏன் இவ்வாறு விழித்துப் பார்க்கிறார்கள் என்று குமுதா நினைத்துக்கொண்டாள்.

திடிரென்று ஒருநாள் காலை குமுதாவுக்கு ஒருகடிதம்-காதற் கடிதம் வந்தது. பிரித்துப் படித்தபொழுது அவளுக்கு பயத்தால் உடம்பு நடுங்கிவிட்டது. கீழே சுந்தரம் என்று கையெழுத்துப் போடப்பட்டிருந்தது. வேறு யாருக்காவது வந்ததைத்தான் உடைத்துவிட்டோமாவென்று உறைமீது அவளுடைய பெயர் நன்றாகப் போடப்பட்டிருந்தது. தபால்முத்திரையில் உள்ளூர்ப் பெயர் — அதுவும் அருகிலிருக்கும் தபால் அலுவலகம் பெயர் இருந்தது. பெண்கள் வேண்டுமென்று கேலி செய்ய இப்படி ஒரு காதற் கடிதத்தை யார் பெயரையாவது போட்டு வைத்துவிடுவார்கள். அதை நம்பி, அந்தப்பெண் ஏமாந்து போகட்டுமென்று! ஒருவாராமாகவே விடுதியிலிருக்கும் பெண்களெல்லாம் தன்னைச் சுற்றிச் சுற்றிவந்து, இரகசியம் பேசிக் கொண்டிருந்தார்கள். யாராவது ஒருத்தி இந்த யோசனையைத் தந்திருப்பாள்! அவர்களுக்கு ஏமாற்றத்தைஅளிக்க, ஒன்றும் தெரியாதவள்போல அலட்சியம் செய்து பேசாமல் இருந்துவிடுவது எனக் குமுதா தீர்மானித்தாள். அந்தக் கடிதத்தைத் தன் புத்தகத்திற்குள் மடித்து வைத்தாள். இரண்டு நாட்கள் கழித்துதான் அவளுக்கு அந்தக் கடிதத்தின் ஞாபகம் வந்தது. மேஜையின்மீது குவிந்து கிடந்த புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தாள். கடிதத்தைக் காணோம்!

(அடுத்த இதழில் முடியும்)

வடக்கில் தொழில்மேடு, தெற்கில் குப்பைமேடு!

ஆசிரியர் (கையெழுத்து)

வடக்கில் வளரும் திட்டங்களுக்கும், தெற்கில் வளரும் திட்டங்களுக்கும் ஒன்றுக்கொன்று எட்டிக் காணமுடியாத அளவு வேறுபாடுகள் இருக்கின்றன.

வடநாட்டினர் பெறுகிற திட்டங்கள் கோடிக்கணக்கில் உருவெடுக்கின்றன, இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களும் வடநாட்டிலேயே எல்லாவகையான தொழில் வளங்களையும் சேர்க்கப் பாடுபட்டுள்ளன. திட்டங்களென்று எடுத்துக் கொண்டால், வடநாட்டில் 100 கோடி, 200 கோடி என்று ஆரம்பமாகிறது. 176 கோடியில் பக்ரா—நங்கல் திட்டம் வடக்கில்! 128கோடி ரூபாயில் ரூர்கேலா உருக்குத்தொழிற்சாலை வடக்கில்! 115கோடி ரூபாயில் துர்க்காப்பூர் தொழிற்சாலை வடக்கில்! 110கோடி ரூபாயில் பிலாய் தொழிற்சாலை வடக்கில்! 100 கோடிரூபாயில் பொக்காரா இரும்புத்தொழிற்சாலை வடக்கில்! 200 கோடியில் இரண்டு எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைகள் வடக்கில்! இவ்வாறு பிரமாண்டமான தொழிற்சாலைகள் வடக்கில் வளருகின்றன, அவ்வாறு பிரமாண்டமான தொழிற்சாலைகள் வளருவதால், தொழில் வளம் வளருகிறது, மக்கள் வாழ்க்கைத்தரம் வளருகிறது, வடக்கு வளருகிறது!

மாறாகத் தெற்கு தேய்ந்து கொண்டு போகிறது!

வடநாட்டை தொழில்வளமாக்குவதில் முனைந்திருக்கும் மத்தியப் பேரரசு, தென்னாட்டை வரண்ட காடாகவே வைத்திருக்க முயலுகிறது. வடக்குத் தொழிற்சாலைகள் மிகுந்த நாடாக ஆகும்பொழு தெற்கு அதற்கு அடிமைப்பட்ட நிலையில் அங்கு உற்பத்தியாகும் பொருள்களை ஏற்றுக் கொள்ளும் சந்தைக்கடையாகவே வைக்கப்பட்டுள்ளது.

வடக்கில் தேடித்தேடிப் பெருந் திட்டங்களைப் போடுகிற டில்லி ஆதிபத்தியம் தென்னாட்டுக்கு ஏதாவது அப்பளத் தொழிற்சாலையையும், கூடைமுறங்கட்டும் தொழிற்சாலையுந்தான் தருகிறது. அண்மையில் வடக்கில் எவ்வளவு புதுப்புதுத் தொழிற்சாலைகள் வளர்ந்துள்ளன, கோடிக்கணக்கில் எவ்வளவு உதவிகளை அவர்கள் பெறுகிறார்கள் என்பதைப் படிப்பவர்கள், தென்னாட்டைப் பார்க்கும் பொழுது கீழ்க்கண்ட செய்திகள்தாம் கிடைக்கின்றன.

"சென்னையில் மூன்று உற்பத்தி-பயிற்சி நிலையங்களை ஏற்படுத்த மத்திய அரசாங்கம் தீர்மானித்துவிட்டது."

உற்பத்தி-பயிற்சிநிலையங்கள் என்று படித்ததும், ஏதாவது இரும்பு-உருக்குத்தொழிலா? என்ஜின் செய்யும் வேலையா? காகிதத் தொழிலா? கனரகத்தில் ஒருவகையா? என்று கேட்கத்தோன்றும். மத்திய சர்க்கார் பார்த்து தொழில் நிலையைத் தீர்மானிக்கிறதென்றால் மிகப்பெரிய அளவு என்றுதான் தோன்றும்! ஆனால் மத்திய சர்க்காரின் திட்டங்கள், வடநாடு என்றால்தான் அப்படியிருக்கும், தென்னாடு என்றால் வேறுவிதமாகத்தான் இருக்கும். சென்னை மாநிலத்திற்கு மத்திய அரசாங்கம் வாக்களித்துள்ள மூன்று உற்பத்தி நிலையங்கள் என்ன தெரியுமா?

"தோல் சாமன்கள் செய்வதற்கான தொழிற்சாலை."

"காகிதப்பைகள், காகிதஉறைகள் செய்வதற்கான தொழிற்சாலை!"

"வர்ணச் சுண்ணும்புக் கட்டிகள், படுக்கைவிரிப்புகள் தொழிற்சாலை"

இந்த மூன்று விதத் தொழிற்சாலைகள் ஏற்படப் போகின்றன. "தொழிற்சாலை" என்ற பெயர்தான் மிகப்பெரியதாக இருக்கிறது. மத்தியசர்க்காராகப் பார்த்துத் தருகிற "தொழில் நிலையங்களின்" முதல் எவ்வளவு தெரியுமா?

தோல்சாமான்கள் உற்பத்தி-பயிற்சித் தொழில் நிலையத்திற்கு மான்யமாக **2850** ரூபாயும், கடனாக **3,850** ரூபாயும் தரப்படும்.

காகிதப்பைகள் உறைசள் தயாரிக்கும் தொழிலுக்காக ரூ **94,950**ரூபாய் மான்யமாகவும், **49,500** ரூபாய் கடனாகவும் மத்தியஅரசாங்கம் தரப்போகிறது.

வர்ணச் சுண்ணும்புக்கட்டிகள், படுக்கைவிரிப்புகள் தயாரிக்கும் தொழிலுக்கு **74.465** ரூபாய் மான்யமாகவும், **1,25,115** ரூபாய் கடனாகவும் தரப்படும்."

மூன்றுவகைத் தொழில் தென்னாட்டில் வளரவேண்டுமென்பதற்காக மத்திய அரசாங்கம் மிகப்பெரிய மனதுடன் கொடுத்திருக்கிற தொகைகள் அவை!

வடநாட்டிற்கு 100கோடி, 200கோடி என்று தொழில் உதவிகள் தரப்பட்டால், தென்னாட்டிற்கு 2,850 (வெறும்) ரூபாய்கள் அளந்து தரப்படுகிறது.

வடக்கில் மிகப்பெரிய அணைகள், மின்சாரத் திட்டங்கள், ஆர்த்திடும் ஆலைக்கூடங்கள், பிரமாண்டமான தொழிற்சாலைகள், பிரமிக்கத்தக்க வேலைத் திட்டங்கள் உருவாகின்றன! இங்கோ, அப்பளத்தொழிலுக்கும், கூடைமுறம்பண்ணும் தொழிலுக்கும், கீற்று முடைவதற்கும், காகிதப் பை ஒட்டுவதற்கும் இப்படிக் கேலிசெய்யும் விதத்தில் சிறு தொழில்கள் தரப்படுகின்றன.

வெந்தபுண்ணில் வேல் பாய்ச்சுவதுபோல, தென்னாட்டின் தொழில்வளம் பெருக்கப்படவேண்டும் என்று நாம் வாதாடும்பொழுது அப்பளத் தொழிற்சாலையும், பனைநாரால் பாய் பின்னும் தொழிற்சாலையும், தோல்தைக்கும் வேலையும், காகிதப்பை ஒட்ட கூழ்கிண்டும் வேலையும், வர்ணச்சுண்ணாம்பு செய்யும் தொழிலும் இப்படித் தொழில்திட்டங்கள் என்ற பெயரால் தெற்கில் மிகத் தாழ்ந்த வருமானமுள்ள உத்... வாக்கரை வேலைகள் தரப்படுகின்றன. டில்லி ஆதிக்கக்காரர்களின் உள் எண்ணம் என்ன தானிருக்கமுடியும்? இரும்பை உருக்கவும், எண்ணெய் எடுக்கவுமான தொழில்கள் வடக்கிலிருப்பவர்களுக்கு மட்டுந்தான் தெரியும், தெற்கிலிருப்பவர்களுக்கு அப்பளத்திற்கு மாவு திரட்டவும் காகிதப்பை செய்ய பசை காய்ச்சவும்தான் தெரியும் என்று நினைக்கிறதா? அல்லது வடநாட்டில்தான் இரும்பு இருக்கிறது, நிலக்கரி இருக்கிறது, எண்ணெய் இருக்கிறது, தென்னாட்டில் அப்பளக்கல்லும், பனைமரமும், மாட்டுத்தோலும் மைதாமாவும் தவிர வேறு எதுவுமில்லை என்று நினைக்கிறதா? அல்லது வடநாட்டில் மட்டுந்தான் பெரிய தொழிற்சாலைகளை உண்டாக்குவோம், உங்களுக்கு எதுவும் கிடையாது என்று சொல்கிறதா?

இவ்வளவுக்கும் கைகட்டி வாய்பொத்தி, டில்லி ஆட்டுவித்தபடி ஆடிக்கொண்டு இருக்கின்றது நமது மாநில அரசாங்கம்! வடநாட்டுப் பத்திரிக்கைகள், "ரூர்கேலாவில் புதிய தொழிற்சாலை!" "பிலாயில் பிரமாண்டமான இரும்பு ஆலை!" "துர்க்காபுரியில் வேலைத் துவக்கம்!" எனப்பெருமிதத்துடன் போடும்பொழுது, தென்னாட்டுப் பத்திரிக்கைகள் ஆயிரம் இரண்டாயிரத்துக்குக் கிடைக்கும் 'குடிசைத்தொழில்' சாலைகளைப்பற்றி இரண்டு காலம் மூன்றுகாலத்துக்குத் தலைப்பு கொடுத்துப் போட வேண்டியிருக்கிறது.

பெரும் இயந்திரங்களும், என்ஜின்களும் வடக்கில் செய்யப்படும்பொழுது, காகிதப்பையும் தட்டுமுட்டுச் சாமானகள் செய்வதுடன் தெற்கு நின்றுவிடும். காகிதத்தொழில் என்றால்கூட, காகிதத்தை உண்டாக்கும் தொழிற்சாலை இங்கு புதிதாகஉண்டாகாது. காகிதம் செய்யும் தொழிற்சாலை எங்கேயாவது வங்காளத்திலோ உத்தரப்பிரதேசத்திலோ, பஞ்சாபிலே வைக்கப்படும். அங்கு செய்யப்பட்ட பேப்பரைக் கொண்டுவந்து, கூழ்காய்ச்சி ஒட்டும் வேலைமட்டும் இங்கு நடைபெறும்.

வடக்கு தொழில் மேடு ஆகிறது, தெற்கு குப்பைக் காடு ஆகிறது!

"ஊருக்கு உபதேசம், உனக்கில்லையடி!"

ஏழைகளைச் சேமிக்கச்சொல்லி, வீண்செலவு செய்யும் அரசாங்கம்!

—(0)—

"ஆறு குதிரைகள் பூட்டிய அலங்கார கோச்சு வண்டிகள் தேவைதானா?"

—(0)—

"ஒழுங்கைக் கற்பிக்கத் தேவை"—நேருவின் விசித்திர வாதம்.

"ஊருக்கு உபதேசம், உனக்கில்லையடி!" என்ற சொற்றொடருக்குப் பின்னால் ஒரு கதையே இருக்கிறது. பதிவிரதா தர்மத்தையும், ஏகபத்தினி விரதத்தையும் ஊருக்கெல்லாம் மாலை நேரத்தில் காலட்சேபத்தில் உபதேசித்துவிட்டு, இரவானதும் தனியாகக் "காலட்சேபம்" நடத்தவந்த பாகவதர் சொல்லியதாக அதைக் கூறுவார்கள். கதை தெரிந்தோ, தெரியாமலோ, தமிழ்நாட்டில் சில பெண்கள் கூட-அதிலும் சட்டசபையில் அந்தப் பழமொழியைக் கூறிவருகிறார்கள்! "ஊருக்கு உபதேசம் உனக்கில்லையடி!" என்று கூறிய பாதவதரைப்போல், பொதுமக்களைப் பார்த்து "செலவு செய்யாதீர்கள்! சேமித்து வையுங்கள் சேமித்து வையுங்கள்!" என்று உபதேசித்துவிட்டு, டில்லி அரசாங்கம் தன்போக்கில் ஆடம்பரச் செலவுகளையும் வீண் வேலைகளையும் செய்துகொண்டிருக்கிறது.

வெள்ளைக்காரன் காலத்தில் இருந்த ஆடம்பரங்களைக் காங்கிரசுக்காரர்கள் கண்டித்தார்கள். மக்களின் வரிப்பணம் ஏகாதிபத்திய பிரதிநிதிகளின் கோலாகல வாழ்வுக்குப் பாழ்படுவதா எனக் கனல் பொறி பறக்கப் பேசினார்கள். தரித்திர நாராயணர்கள் நாட்டில், வைசிராயுக்கு மாளிகை ஏன், மண்டபம் ஏன்? விருந்து ஏன், வரவேற்பு ஏன்? என்றெல்லாம் கேட்டார்கள். ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் மக்களின் வரிப் பணத்தை ஆடம்பரங்களில் பாழாக்கும் பொழுது, நாட்டுப் பற்றுடையோர் எவரும் கொதித்தெழத்தான் செய்வார்கள். குடிமக்கள் கும்பி காய்ந்து வாடும்பொழுது, கொலுப் பொம்மைகள் கோலாகலமாக வாழ்வதா என்ற கேள்வி எழத்தான் செய்யும்.

ஏழையின் கண்ணீரிலிருந்து, பாட்டாளியின் வியர்வையிலிருந்து பிழிந்து எடுக்கப்படும் வரிப்பணம், எத்தர்களின் உல்லாச வாழ்வுக்குப் பயன் படுவதா என்ற கேள்வி மனிதாபிமானம் கொண்டோர் மனதில் எழத்தான் செய்யும்.

அழுகையொலி ஓர்புறம்; கேளிக்கை மண்டபங்களிலிருந்து சிரிப்பொலி வேறோர் புறம்! பஞ்சத்தின் கோரப் பிடியில் ஒருபுறம் கோடானு கோடி மக்கள், பத்து லட்சம் ரூபாய்களைச் செலவிட்டு கவர்னர் மஞ்சத்தில் விளங்கிடும் அதிகாரப் பிம்பங்கள் வேறோர்புறம்! கடும் வெய்யலில் கல்லுடைத்து, மண்வெட்டி வாழ்க்கைக் கடுமை தாங்காது வாடும் மக்கள் ஓர்புறம், ஆறு வெண் குதிரைகள் பூட்டப்பட்ட அழகிய கோச்சு வண்டியில், வெண் பட்டுக் குடைக்கீழ், வெண் கவரி வீசிவர, மாலை வேளையில் உல்லாசப் போக்கில் ஆளும் தேவதைகள் பவனிவரும் காட்சி வேறோர் புறம்!

ஏகாதிபத்திய வெறியன் காலத்தில் இந்த ஏற்றத்தாழ்வுகள், அருவருக்கத்தக்க ஏறுமாறான காட்சிகள் நடைபெற்றன. காங்கிரசுக்காரர்கள் வந்தார்கள், ஏகாதிபத்திய வெறியன் காலத்தில் இருந்த ஆடம்பரங்களை வெறுத்த காங்கிரசுக் கட்சி ஆட்சிக்கு வந்தது!

ஏகாதிபத்திய வெறியன் காலத்தில் இருந்த ஆடம்பரங்கள், இந்த "ஏழைப் பங்காளர்கள்" காலத்தில் போனதா?

இல்லை.

அன்றிருந்த ஆடம்பரங்கள் தொடர்ந்து இருக்கின்றன, ஒன்றுகூட விடாமல் நடக்கின்றன, ஒன்றுக்குப் பத்தாக வளர்ந்துள்ளன!

வெள்ளைக்கார ஏகாதிபத்தியன் காலத்தில் இருந்த ஆடம்பரங்கள் எவை, இந்தப் பாரத புத்திரர்கள் ஆட்சியில் குறைந்திருக்கின்றன?

அரண்மனை வாழ்வு போயிற்றா? ஆடம்பர விருந்துகள் போயிற்றா? அலங்கார மண்டபங்கள் குறைந்ததா? ஆறு குதிரை பூட்டிய கோச்சு தவிர்க்கப்பட்டதா? மைல் கணக்கில் சுற்றியிருக்கும் மாளிகை குறைந்ததா? அதற்காகக் கொட்டியளக்கப்படும் இலட்சக்கணக்கான ரூபாய் குறைந்ததா? எடுபிடி ஏவலாட்கள் குறைந்ததா? எதிர் பார்த்து வரவேற்கும் போலிசு பட்டாளத்தின் எண்ணிக்கை குறைந்ததா?

அன்றிருந்த ஆடம்பரமோ, வீண் செலவோ எதுவுங் குறையவில்லை.

மக்களின் வரிப்பணத்தை ஆடம்பரத்திற்காக வீணாக்குவதைக் கண்டித்து, பாராளு மன்றத்தில் பலர் பேசினார்கள். "ஆறு குதிரை பூட்டிய அலங்கார கோச் வண்டிகள் தேவைதானா?" என கிருபளானி கேட்டிருந்தார். வெள்ளைக்காரன் நடத்திய ஆடம்பரச் செலவுகளைக் கண்டித்த காங்கிரசில் கிருபளானி அன்று இருந்தவர். எனவே அதே ஆடம்பரத்தைக் காங்கிரசு அரசாங்கம் நடத்துவதைக் கண்டித்து இன்று உரிமையுடன் அவர் கேட்டார்.

அதற்கு பண்டித நேரு மிக விநோதமானதொரு பதிலைத் தந்திருக்கிறார். அதாவது "ஆடம்பரங்களாகக் கருதப்படுபவை, மக்களிடம் ஒழுங்கைக் கற்பிக்க உதவுகின்றன!" அன்று வெள்ளைக்காரனின் ஆடம்பரச் செலவுகளைக் கண்டித்த வீரர், இன்று "ஆடம்பரம் ஒழுங்கைக் கற்பிக்க உதவுகிறது, எனவே ஆறு குதிரை பூட்டிய கோச்சு வண்டியில் போவதில் தவறில்லை" என்று கூறுகிறார்.

ஒரு நாட்டு மக்களுக்கு ஒழுங்காக இருக்கும் தன்மையை உண்டாக்க, கோச்சு வண்டியில் பூட்டப்பட்ட குதிரைகளின் எண்ணிக்கை உதவுகிறதென்பது உண்மையென்றால், ஆறு குதிரைகள் என்ன, அறுநூறு குதிரைகள்கூட பூட்டி ஊர்வலம் அழைத்துவரலாம்! குதிரைகள் கிடைக்கவில்லையென்றால் "குதிரை மாதிரி"களையாவது ஒன்று திரட்டி ஊர்வலம் நடத்தலாம்! கோச்சு வண்டியில் பூட்டப்பட்ட குதிரைகளின் எண்ணிக்கையில், மக்களுக்கு ஒழுங்கைப் போதிக்கும் தன்மை நல்லவேளையாக இல்லை.

மக்களைப்பார்த்து "சேமித்து வையுங்கள்!" என்று உபதேசம் செய்துவிட்டு, அரசாங்கம் மட்டும் கவர்னர்களுக்காகவும் குடியரசுத் தலைவருக்காகவும் ஏராளமாக வீண்செலவு செய்கிறது.

முன்பு வெள்ளைக்கார வைசிராய் காலத்தில் 10 கோடி ரூபாயில் நடந்த மத்திய அரசாங்க நிருவாகம், காங்கிரசு ஆட்சியில் தலைவர், உப தலைவர் 39 மந்திரிகள் எல்லோருங்கூடிய பெரிய அரசாங்க நிர்வாகத்தில் மொத்தம் 125 கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது.

சராசரி ஆண்டு வருமானம் ரூ. 272 ஆக இருக்கும் நாட்டில், கவர்னருக்கு மட்டும் பத்து லட்சம் ஆண்டொன்றுக்கு மக்கள் தரும் வரிப் பணத்திலிருந்து செலவிடப்படுகிறது.

பகலில் வண்டியிழுத்தும் வேலை செய்தும் இருக்க இடமில்லாமல் பாதையோரத்தில் உறங்கிடும் பல லட்சக்கணக்கான மக்கள் இருக்கும் பொழுது, பஞ்சாப் கவர்னருக்கு 40 லட்ச ரூபாயில் ஒரு மாளிகை அமைக்கப்போகிறார்கள்; புது டில்லிக்கு அருகில் அரசியல் வட்டாரத்தினருக்காக புதிய மாளிகைகள் பல கோடி ரூபாய்கள் செலவில் கட்டப்படுகின்றன.

வெள்ளைக்காரன் காலத்திலிருந்ததைவிட, காங்கிரசுக்காரர்கள் ஆட்சியில் ஆடம்பரச் செலவுகள் ஏராளமாகியுள்ளன, பெயர் மாற்றந்தவிர, ஆடம்பரத்தில் எந்தவித மாறுதலுமில்லை.

"சர்" பட்டம் "திவான் பகதூர்" பட்டங்கள் போய், "பத்மபூஷன்" "பத்மரத்ன" ஆகிய பட்டங்கள் வந்துள்ளன.

வைசிராய் மாளிகை "ராஷ்டிரபதி பவனம்" என அழைக்கப்படுகிறது. கவர்னர் மாளிகை "ராஜபவன்" என்று பெயர் மாற்றப்பட்டிருக்கிறது.

ஏகாதிபத்திய ஆட்சியில் எந்தெந்த ஆடம்பரங்கள் இருந்தனவோ, அவையெல்லாம் காங்கிரசு ஆட்சியில் ஒன்றுவிடாமல் வந்துவிட்டன. கேட்டால், "ஒழுங்கைக் கற்பிக்க அவை உதவுகின்றன" என பண்டித நேரு அறிவிக்கிறார்.

நல்ல வேளையாக காந்தியார் இன்று இல்லை. ஆறு குதிரை கோச்சு வண்டியில் ஆடம்பரமாக வருவது ஒழுங்கை உண்டாக்கும் வாழ்வு என அவர் நம்பியது கிடையாது. "மிக எளிய வாழ்க்கைதான் ஒழுங்கைத்தரும்" என அவர் நம்பினார், அப்படியே வாழ்ந்தார்! அவருடைய சீடர்கள், அவருடைய பெயரைச் சொல்லிடும் சீலர்கள், ஆறு குதிரைகள் இழுக்கப் பவனி வருகிறார்கள், ஆடம்பரமாக அரண்மனைகளில் வாழ்கிறார்கள், கேட்டால் "அதுதான் ஒழுங்கைக் கற்பிக்கும் முறை" எனக் கூசாமல் கூறுகிறார்கள்.

ஏகாதிபத்தியக்காரர்கள் செய்த ஆடம்பரச் செலவுகளை அன்று எதிர்த்த இவர்கள், இன்று அதேவித வீண் செலவுகளைச் செய்கிறார்கள். காரணம், அந்த வெள்ளை ஏகாதிபத்தியம் இருந்த இடத்தில் மற்றொரு வித ஏகாதிபத்தியம் வந்துள்ளது! எனவே ஏகாதிபத்தியத்திற்குரிய தன்மைகள், ஆடம்பரங்கள் ஆணவப் பேச்சுகள் இவர்களிடமும் காணப்படுகின்றன!

தென்னாட்டுக்குப் பலன் உண்டா?

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தில் ஏழ்மையை விரட்ட முடியாமல் போனதற்குக் காரணம் என்ன? முதல் ஐந்தாண்டுத் திட்டத்தை இவர்கள் எந்த அளவு வெற்றிகரமாக நடத்தினார்கள், எதிர்பார்த்த பலன்கள் எந்த அளவு கிடைத்தன என்பவைகளைப் பார்த்தால்தான், இரண்டாவது திட்டத்தை இவர்கள் எப்படி நிறைவேற்றுவார்கள் என்பதை ஒருவாறு கூறமுடியும்.

முதல் ஐந்தாண்டுத்திட்டம் முடிந்தபின், திட்டக் குழுவினர் கூடி அதன் பலாபலன்களை ஆராய்ந்து கீழ்க்கண்ட முடிவுகளை வெளியிட்டனர்.

1. இரும்பு உருக்கு உற்பத்திகள் போடப்பட்ட அளவுக்கு உண்டாக்கப்படவில்லை.
2. பயிர்த்தொழிலும், சிறு கைத்தொழில்களும் மிக மோசமான அளவில்தான் முன்வந்துள்ளன.
3. சமுகநலத் திட்டங்களும், தேசிய பரப்புத் திட்டங்களும் தோல்வியளித்துள்ளன.
4. முக்கிய உணவுப் பொருளான அரிசியும் கோதுமையும் உற்பத்தி குறைந்துள்ளன.

இது அரசாங்கமே பார்த்து நியமித்து, திட்டத்தைப் பரிபாலிக்க இருக்கும் திட்டக்குழுவினர் அவ்வாறு முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் பலன் பற்றிக் கூறியுள்ளனர்.

முதல் ஐந்தாண்டுத்திட்டத்தில் 2360 கோடி ரூபாய்கள் செலவிடப்பட்டுள்ளன! மக்களின் வரிப்பணத்திலிருந்து 3.0 கோடி ரூபாய்களை வாரி இறைத்துவிட்டு கடைசியாக என்ன பலன் என்றுபார்த்தால், உணவுப் பற்றுக்குறை அதிகமாயிருக்கிறது, ஏழ்மைப் "பிசாசு" தாண்டவமாடுகிறது; வேலையில்லாத்திண்டாட்டம் அமோகமாக இருக்கிறது, வறுமையில் தத்தளிப்பவர்கள் அதிகமாகி இருக்கிறார்கள்.

2360 கோடி ரூபாய்களை வாரி இறைத்துவிட்டு போட்ட திட்டங்களை நிறைவேற்றத் தெரியாத அதே மத்திய அரசாங்கம்தான், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 5600 கோடி ரூபாய்களை வாரியிறைக்கப் போகிறது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திலும், எதிர்பார்த்த பலன்கள் கிடைக்கப் போகிறதா என்பது சந்தேகமே! போகிறபோக்கில் முதல் ஐந்தாண்டுத் திட்டம் முடிந்த மாதிரிதான், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டமும் முடியும்போலத் தோன்றுகிறது. அதற்கான அறிகுறிகள் இப்பொழுதே உண்டாகியுள்ளன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் ஆரம்பித்து ஒரு ஆண்டு முடிந்துவிட்டது. இந்த ஒரு ஆண்டுக்காலத்திற்குக் குறிப்பிட்டுப்போடப்பட்ட அளவு நிறைவேற்றப்பட்டனவா என்றால், இல்லை! இந்த ஒரு ஆண்டுக் காலத்தில் எதிர்பார்த்த பலன்களும் வரவில்லை! 1956 மத்தியில் ஆரம்பித்து 1961 மத்தியில் முடிவது இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம். இதில் முதல் ஆண்டாகிய 1956-57ல் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவில்லை. டில்லியிலிருந்து ஜூன் 3ந்தேதி தரப்பட்ட பத்திரிகைச் செய்தி "இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டில், வாக்களிக்கப்பட்ட அளவுகளுக்கு மிகக் குறைவாகவே திட்டம் நிறைவேறியிருக்கிறது" என்று கூறுகிறது.

முக்கியமாக இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் 1956-57ல் 25 லட்சம் டன் உணவுப் பொருள் அதிகமாக உற்பத்தி செய்வதென திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் திட்டத்தினால் 1956-57ல் 14லட்சம் டன் உணவுப் பொருள்களைத்தான் அதிகமாக்க முடிந்தது.

ஐந்தாண்டுத் திட்டங்களை முக்கியமாகப் போட்டதே, நாட்டிலுள்ள உணவுப்பற்றுக் குறையை நீக்க! ஆனால் அந்த விதத்தில் இவர்கள் போடும் திட்டங்கள் சரியான பலன்களைத் தரவில்லை. திட்டத்தில் செலவு செய்யப்படவேண்டியது செலவாகிவிடும், வரவுப் பக்கத்தில் வரவேண்டியபலன் குறைந்து இருக்கும்.

ஐந்தாண்டுத் திட்டத்தை குறிப்பிட்டகாலத்துக்குள் முடித்துவிடவேண்டும் எனச் சிலர்-மத்திய மந்திரிகளும், மாநில மந்திரிகளும் தடிக்கிறார்கள். காலத்தை நீடித்தால், குடிமுழுகிப் போய்விடுமெனக் கூச்சலிடுகிறார்கள். இவர்கள் போட்டிருக்கிற திட்டத்தின் அளவும், மக்களிடம் இவர்கள் போடப்பார்க்கிற வரிப்பளுவையும், முதல் ஐந்தாண்டுத்திட்டத்தை இவர்கள் நிறைவேற்றிய இலட்சணத்தையும் பார்த்தால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேறி, எதிர்பார்த்த பலன்களைத் தந்துவிடுமா என்பது சந்தேகமே! இந்த சந்தேகம் நமக்குமட்டும் வந்ததாக நினைக்கக்கூடாது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை உருவாக்கிய திட்டக்குழுவினர் இருக்கிறார்களே "சிருட்டி பிரமாக்கள்" அவர்களுக்கே அந்த சந்தேகம் உண்டாகியிருக்கிறது. இரண்டாவது திட்டத்தை உண்டாக்கிய திட்டக்குழுவில் பண்டிதநேரு, வி. டி. கிருஷ்ணமாச்சாரியார், குசாரிலால் நந்தா, கே. சி. நியோகி, சி. டி. தேஷ்முக், ஜே. சி. கோஷ் ஆகிய ஆறு பேர்களும் இருந்தார்கள். அவர்கள் ஒன்று சேர்ந்து உருவாக்கிய திட்டம்தான் இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம், மொத்த 643 பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகமாக அது வெளிவந்தது. திட்டங்களை யெல்லாம் வகுத்துவிட்டு, கடைசி பாராவில் கையெழுத்துக்களைப் போடுவதற்கு முன்னதாக, அவர்கள் கீழ்க்கண்டவாறு எழுதியுள்ளார்கள்.

"In a plan of such vide scope there is always room for differences in emphasis which must be appreciated. Sri K. C. Neogy has stressed that in view of the magnitude of the Plan it will be difficult to implement it in a period of five years and that deficit financing on an excessive scale may prove dangerous to the economy and may cause hardship to certain sections of the population...We agree that these considerations are important and should be constantly kept in view in carrying out the Plan."

"இவ்வளவு பெரிய திட்டத்தில் கருத்து வேறுபாடுகளுக்கு இடமிருக்கத்தான் செய்யும், அதை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். திட்டத்தின் பிரமாண்டமான அளவைப்பார்க்கும்பொழுது ஐந்தாண்டுக்காலத்தில் முடிக்கவேண்டுமென்பது கடினமான செயல் என்று கே. சி. நியோகி வலியுறுத்துகிறார். பற்றாக்குறை வரவு-செலவுத் திட்டத்தை அதிக அளவில் நடத்தினால், நாட்டின் பொருளாதாரத்துக்கு பேராபத்தை அது உண்டாக்குமென்றும், அதனால் சில குறிப்பிட்டவகையில் மக்களுக்கு கஷ்டத்தைத் தருமென்றும் அவர் வற்புறுத்துகிறார். இவைகள் முக்கியமான கருத்துக்கள், திட்டத்தை நிறைவேற்றுவதில் அவற்றை நாம் மனதில் வைத்துக்கொள்வோமெனத் தெரிவிக்கிறோம்."

ஐந்தாண்டுக் காலத்துக்குள் முடிக்கமுடியாத திட்டம், வரவு குறைவாக செலவு அதிகமாக இருக்கும் நிதித்திட்டங்களால் நாட்டின் பொருளாதாரத்துக்குப் பேராபத்து, பொதுமக்களில்பெரும்பாலோர்வரிக்கொடுமையாலும் அதிகமான செலவுத் திட்டங்களாலும் பாதிக்கப்படப்போகிறார்கள் என்பதை, திட்டத்தைப்போடும்பொழுதே திட்டக்குழுவில் ஒருவரான கே. சி. நியோகி வலியுறுத்தி வந்திருக்கிறார். கடைசியிலும் திட்டம் எழுதப்பட்டபின்னும் அவர் தமது கருத்தை வலியுறுத்தியிருக்கிறார். அதனால் தான்கையெழுத்துப்போடுவதற்கு முன், அவரது கருத்து அவருடைய பெயருடன் வெளியிடப்பட்டுள்ளது. கே. சி. நியோகி தந்த எச்சரிக்கையை, திட்டத்தை நிறைவேற்றும் பொழுது கவனித்ததாகத் தெரியவில்லை.

ஐந்தாண்டுத் திட்டத்தின் பேரால் வரிபோட்டு, நாட்டின் பொருளாதாரத்தில் பெரியதொரு திண்டாட்டத்தை உண்டாக்கியுள்ளார்கள்.

ஏழ்மை போகக்கூடாது, வேலையில்லாத் திண்டாட்டம் இருக்கத்தான் வேண்டும், வறுமையில் தத்தளிப்பவர்கள் இன்னும் அந்தநிலையிலேயே இருக்கட்டும் என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் இவர்கள் போடுகிறவரிகளால், உண்டாக்குகிற பணவீக்கத்தால், திட்டத்தை நடத்துகிற அலங்கோலத்தால், நாட்டின் அவலநிலை நீங்காது. ஏழ்மை இன்னும் அதிகமாகும்.

வரிக்கொடுமையால் திட்டம் வளராது, மக்களை அல்லற்படுத்துகிற வறுமையும் வாட்டமும்தான் வளரும்.

தென்னாட்டு மக்களைப் பொறுத்தவரை, குறைந்த அளவில் நிறைவேற்றுவதா? குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றுவதா? என்பதையெல்லாம் விட, திட்டத்தின் அடிப்படையிலேயேநாம் குறைகாண்கிறோம். இரண்டு ஐந்தாண்டு திட்டங்களிலும் தென்னாட்டுக்குரிய பங்கு வழங்கப்படவில்லை, தென்னாட்டின் வரிப்பணம் வடநாட்டை வளப்படுத்தவே, திட்டங்களின் மூலம் பயன்பட்டுள்ளது. இந்த நிலையில், திட்டத்திற்காக அதிகமான வரிகள் வசூலிக்கப்படுமேயானால் வடநாட்டுத் திட்டங்களுக்காக தென்னாடு செலுத்தும் கப்பம் அதிகமாகிறது என்றுதான் பொருள். ○

முகவரி மாற்றம்

கே. பி. சுந்தரம்
[அரசினர் சான்று பெற்றவர்]
தையல் தொழில் நிலையம்
2-132 புரசைவாக்கம் ஐரோடு'
வேப்பேரி,
சென்னை-1.

சேலம் சீரழிகிறது!

—(0)—

தென்னாட்டுத் தொழிற்சீலம் வடநாட்டுக்குப் போகிறது!

சேலம் மாவட்டத்தில் மூன்றுவகைக் கனிப்பொருள்கள் கிடைக்கின்றன. அவை இரும்பு, பாக்சைட், மாக்னசைட். இம்மூன்றும் இன்றைய தொழில்துறையில் இன்றியமையாத மூலப்பொருள்களாகும். அவைகளைக்கொண்டு, இரும்பு - உருக்குத் தொழிற்சாலை, அலுமினியத் தொழிற்சாலை, மாக்னசைட் பண்படுத்தும் தொழிற்சாலை ஏற்படுத்தலாம். தென்னாட்டின் தொழில்வளத்தைப்பெருக்குவதற்கான வகைகள் இருக்கின்றன.

மண்வளம் இருக்கிறது, மண்ணில் இரும்பும், அலுமினியமும்; மாக்னசைட்டும் கலந்த கனிவளமிருக்கிறது; அவற்றை எடுத்து நாட்டைத் தொழில் மயமாக்கவல்ல நுட்பவளமுமிருக்கிறது.

ஆனால் அரசியல் வளம் மட்டும் இங்கு இல்லை.

சேலத்தில் இரும்புப் புதைந்து கிடக்கிறது, அதை வெட்டியெடுப்பதற்கான உதவி—நன்றாகக் கூறவேண்டுமானால் அனுமதி டில்லியிலிருந்து வரவேண்டும். டில்லி ஆதிக்கம் அனுமதித்தால்தான் சேலத்தில் இரும்பு - உருக்குத் தொழிற்சாலை ஏற்படமுடியும். டில்லி தேவதைக்கு எப்பொழுது கருணைபிறக்குமோ, திட்டக்குழுவினரின் கண் எப்பொழுது தெற்கு நோக்கி—கோபத்துடன் அல்ல, கனிவுடன் திறக்குமோ, அன்றுதான் சேலத்து மண்ணில் மயங்கிக்கிடக்கும் துகள் இரும்பாக, எஃகாக வெளிப்படும்! முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேலம் இரும்புத் தொழிற்சாலை சேர்க்கப்படலாம் என நம்பிக்கை தந்தார்கள். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வந்துவிட்டது, இப்பொழுது மூன்றாவதற்குக்கூட அல்ல நான்காவது ஐந்தாண்டுத் திட்டங்களுக்குத் தள்ளிப்போடுகிறார்கள். சேலத்தில் இரும்புத் தொழிற்சாலை உருவாவதற்கானச் சூழ்நிலை பல ஆண்டுகளாக தெரிந்திருந்தும் இந்திய அரசாங்கத்தின் முதல் மூன்று இரும்பு-உருக்குத் தொழிற்சாலைகளும் வடநாட்டிலேயே போடப்பட்டன. நான்காவது இரும்புத் தொழிற்சாலை சேலத்தில் வரக்கூடுமென மூன்று நான்கு வாரங்களுக்குமுன் சில செய்திகள் வந்தன. ஆனால் மத்திய அரசாங்கம் அதை மறுத்து, சேலத்தில் தற்பொழுது இரும்பு-உருக்குத் தொழிற்சாலையொன்றை ஏற்படுத்துவதற்கில்லை என அறிவித்துவிட்டார்கள்.

இரண்டாவதாக, அலுமினியத் தொழிற்சாலை சேலத்தில் ஏற்படுத்துவதைப்பற்றி பேச்சு மூச்சே காணோம். சேலத்தில் ஏற்படக்கூடிய தொழில்வளம் இங்கேயுள்ளவர்களுக்குத் தெரியவில்லையென்றாலும், டில்லி ஆதிபத்தியத்தால் அலட்சியப் படுத்தப்பட்டதென்றாலும், வெளிநாட்டார்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது. ருஷிய நாட்டுத் தலைவர்களான குருஷேவ், புல்கானின் இருவரும் இந்திய சுற்றுப்பயணத்தை முடித்துத் திரும்பியதும், இந்தியத்தொழில் வளர்ச்சியைப்பற்றிய ஒரு உண்மையை எடுத்துரைத்தார்கள். "இந்தியா தொழில் துறையில் வளர்ந்துவருகிறது. ஆனால் தென்னிந்தியாவில் தொழில்வளர்ச்சி குறைந்து காணப்படுவது வருந்தத்தக்கதே! தென்னாட்டில் ஒரு அலுமினியதொழிற்சாலையை ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முயற்சியெடுத்தால், அதற்கு ருஷிய அரசாங்கம் உதவுவதற்குத் தயாராக இருக்கிறது"

இவ்வாறாக வடக்குத்தெற்கு பிரிவு மனப்பான்மைக்குச் சிறிதுகூட சம்பந்தமில்லாத வெளிநாட்டார்கள் அதிலும் இந்திய அரசாங்கத்தின் சிறப்பான விருந்தினர்களாக அழைக்கப்பட்டு, மிகுந்த ஆரவாரத்துடன் எல்லாப்பகுதிகளிலும் வரவேற்புகள் அளிக்கப்பட்டு, மேலெழுந்தவாரியாகச் சுற்றிப்பார்த்துவிட்டுப் போனவர்களுக்குக்கூட, வடநாட்டைவிடத் தென்னாடு தொழில்வளர்ச்சியில் குன்றியிருப்பது நன்றாகத் தெரிகிறது. சித்தரஞ்சன் தொழிற்சாலையையும் சிந்திரித் தொழிற்சாலையையும், பக்ராநங்கல் அணைக்கட்டையும், தாமோதர் பள்ளத்தாக்குத் திட்டத்தையும்; பார்த்த கண்களால் பெரம்பூர் பெட்டித் தொழிற்சாலையையும், பவானி மண்மேட்டையும், பாலாற்றுப் பாலத்தையும், பார்த்தால், யாரும் சொல்லாமல் அவர்களுக்காகவே நன்றாகத் தெரிகிறது வடக்கு வளர்ந்திருப்பதும், தெற்கு தேய்ந்திருப்பதும்! பிரமாண்டமான அணைக்கட்டுகளையும் தொழிற்சாலைகளையும் அங்கு பார்த்துவிட்டு, தெற்குப்பக்கம் திரும்பினால் பெருத்த மாறுபாடு தெரிகிறது! அதே சமயத்தில், தொழிற்சாலைகள் உண்டாவதற்கானவாய்ப்பு தென்னாட்டில் இருப்பதும் அவர்களுக்குத் தெரிகிறது. அதனால்தான் ருஷிய நாட்டுத் தலைவர்கள் அலுமினியத் தொழிற்சாலைக்குத் தாங்கள் உதவுதாக வாக்களித்தபொழுது, சேலத்தில் கிடைக்கும் பாக்சைட் கனிப்பொருளை மனதில் வைத்துச் சொன்னார்கள். சேலத்தில் அலுமினியத் தொழிற்சாலையை உண்டாக்கலாம் என்ற எண்ணம் வெளிநாட்டவர்களுக்குத் தெரிகிறது, ஆனால் இந்திய அரசாங்கத்துக்கு மட்டும் தெரியவில்லை போலும்! அலுமினியக் கனிப்பொருள் சேலத்துக்கருகில் கிடைக்கிறது, வடநாட்டில் எங்கேயாவது சோலாப்பூரிலோ, கோலாப்பூரிலோ கிடைத்திருந்தால், கோடிக்கணக்கில் முதல்தரப்பட்டு ஒரு பெரும் தொழிற்சாலை அங்கு உண்டாக்கப்பட்டிருக்கும்.

மூன்றாவதாக மாக்னசைட் ஒன்றுதான் தற்பொழுது ஓரளவுக்கு எடுக்கப்படும் கனிப்பொருள். மாக்னசைட் என்பது மிகக் கடுமையான தீக்கும் தாக்குப்பிடிக்கவல்ல ஒரு அரிய கனிவகை. இரும்பு உருக்குத் தொழிற்சாலைகளில் பெரும் நெருப்புக் கொப்பரைகள் உருகா வண்ணம் பாதுகாப்பது மாக்னசைட் பொருளேயாகும். தீயின் கடுமைக்கு ஈடுகொடுக்கவேண்டிய எல்லா தொழில்களிலும் மாக்னசைட் மிகவும் தேவைப்படுவதாகும். அத்தகைய மாக்னசைட் சேலம் மாவட்டத்தில் கிடைக்கிறது. கடந்த அறு ஆண்டுகளாக மாக்னசைட் எடுக்கும் தொழில் நடைபெறுகிறது, மாக்னசைட் சிண்டிகேட் என்ற ஒரு வெள்ளைக்காரக் கம்பெனி அதை நடத்துகிறது. அந்தக் கம்பெனிக்குத் தரப்பட்டிருந்த குத்தகை உரிமைக்காலம் 1958-ம் ஆண்டோடு முடிவடைகிறது.

வெள்ளைக்காரக் கம்பெனியின் உரிமை தீர்ந்ததும், தாமே எடுத்துநடத்த சென்னை அரசாங்கம் விரும்பியது. மாக்னசைட்டை எடுக்கும் உரிமை அரசாங்கத்துக்கு மீண்டும் வருகிறதெனினும், சென்னை மாநில அரசாங்கத்தால் தாமாகச் செய்துகொள்ள முடியவில்லை. "இப்படி மாக்னசைட் என்ற தொழில்வகை எங்கள் மாநிலத்தில் இருக்கிறது. இப்பொழுது இருக்கும் வெள்ளைக்காரக் கம்பெனியின் உரிமை 1958-ம் ஆண்டோடு தீர்ந்துவிடுகிறது. அதை எடுத்து நடத்த இரண்டுகோடி ரூபாய் மூலதனம் போதுமானது. நாங்கள் அதை ஏற்று நடத்த எங்களுக்கு அனுமதி தாருங்கள்!" எனச் சென்னை அரசாங்கம் டில்லி அரசாங்கத்துக்கு எழுதிக்கேட்டது.

"சேலத்தில் மாக்னசைட் சிண்டிகேட் தொழிற்சாலைக்குத் தரப்பட்ட உரிமை 1958—ம் ஆண்டோடு முடிவடைவது எங்களுக்கும் தெரியும். அதன் பிறகு சேலத்து மாக்னசைட்டை எடுக்கும் உரிமையை நாங்கள் கல்கத்தா கம்பெனி ஒன்றுக்குத் தந்துவிட்டோம். எனவே அதைப்பற்றி நீங்கள் வீணாகச் சிரமப்பட வேண்டாம்!" என்று மத்தியஅரசாங்கம் சென்னைக்கு அறிவித்தது.

சென்னைமாநிலத்தில் மாக்னசைட் கிடைக்கிறது; அதை வெட்டியெடுக்கும் உரிமை பெற, சென்னைமாநிலம் டில்லி அரசின் அனுமதியைப் பெற வேண்டியிருக்கிறது! அந்தக் கனதனவான்களோ கல்கத்தா கம்பெனிக்கு அந்த உரிமையைத் தந்துவிட்டதாக அறிவிக்கிறார்கள், எப்படியிருக்கிறது கதை!

கட்டிய பெண்டாட்டி வீட்டினுள் இருக்கிறாள், அவளை அணுக அவளுடைய கணவன் கோடிவீட்டு குண்டு முதலாளியை அனுமதிகேட்கிறான்! அந்த முதலாளியோ "அந்த உரிமையைவடக்குவீட்டு வாருசிலாலுக்குக் கொடுத்துவிட்டேனே!" என்று கூறுகிறான்!

தென்னாட்டில் தொழில்வளமில்லை என்ற குறைபாடு இருக்கிறது. இதை நாம் மட்டுமல்ல, வெளிநாட்டிலிருந்து வேடிக்கை பார்க்க வருபவர்கள் கூடச் சொல்லிவிட்டுப் போகிறார்கள். அந்தநிலையில் இருக்கும் ஒன்றிரண்டு தொழில்களாலும், இந்தநாடு பயன்படமுடியாதவாறு போகிறது. வெள்ளைக்காரன் இந்த நாட்டுச்செல்வத்தைச் சூறையாடியதுபோக கல்கத்தா கம்பெனியோ பம்பாய்க் கம்பெனியோ சூறையாடும்படியாக அனுமதி தரப்படுகிறது.

"முள்ளு முனையில் மூன்று குளம் வெட்டியதில், இரண்டு குளம் பாழ், ஒன்று தண்ணீரே இல்லை!" என்று பாட்டுப் பாடுவதுபோல, சேலத்துக்கருகில் கிடைத்த மூன்று கனிப்பொருள்களில், இரும்புக்கும் அலுமினியத்திற்கும் தொழிற்சாலைகள் ஏற்படவில்லை, மூன்றாவதாகமாக்னசைட்டுக்கு ஏற்பட்ட தொழிற்சாலை நம்மிடமில்லை! ஆக மூன்றும் இந்த நாட்டுக்குப் பயன்படாமலிருக்கின்றன.

சேலம் மாக்னசைட் தொழிலை நடத்த சென்னை மாநில அரசாங்கமே கேட்டது. ஆனால் வடநாட்டு முதலாளியை முதன்மையாகக் கொண்ட தனிப்பட்ட கம்பெனி அதைத் தட்டிச் சென்றது.

வெள்ளை ஏகாதிபத்தியம் இருந்த இடத்தில் வடநாட்டு ஏகாதிபத்தியம் வந்துள்ளது! வெள்ளை முதலாளிக்குப் பதில் வடநாட்டு முதலாளி வருகிறான். "சேலங்கள்"—தென்னாட்டுத் தொழில் சிலங்கள் அந்நியர் கையில் சிக்கிச் சீரழிகின்றன!

"மன்றம்" அச்சகத்தில் (26, நைனியப்பன் தெரு, மண்ணடி சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. —(தொலைபேசி எண்: 55697)